**நாணயச் சபை**

**இலங்கை மத்திய வங்கி**

**2021 திசெம்பர் 09 வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2021இன் 16ஆம் இலக்கம்**

---

# உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஜே)(1) ஆகிய பிரிவுகளினால் வழங்கப்பட்ட அதிகாரங்களை செயற்படுத்துகின்ற விதத்தில், நாணயச் சபை, உரிமம்பெற்ற வங்கிகளில் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவத்தினையும் புத்துயிரளித்தல் கட்டமைப்பினையும் மேலும் வலுப்படுத்தும் நோக்குடன், உரிமம்பெற்ற வங்கிகள் என இதனகத்துப்பின்னர் குறிப்பீடு செய்யப்படும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்குமான தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மீது பின்வரும் பணிப்புரைகளை இத்தால் விடுக்கிறது.

1. **அதிகாரவலுவளிப்பு**

1.1 வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) இன் நியதிகளில் நாணயச் சபை, வங்கித்தொழில் முறைமையின் ஆற்றலினை உறுதிசெய்யும் பொருட்டு அத்தகைய வங்கியின் அல்லது வங்கிகளின் வியாபாரத்தினை ஏதேனும் அம்சங்களைக் கொண்டு நடத்தவேண்டிய முறை தொடர்பில் அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் பணிப்புரைகளை விடுப்பதற்கான அதிகாரத்தினைக் கொண்டிருக்கிறது.

1.2 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76(ஜே)(1) இன் நியதிகளில், நாணயச் சபை உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கு அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஏதேனும் வகைக்கு, அத்தகைய வங்கிகள் வியாபாரத்தின் ஏதேனும் அம்சங்களைக் கொண்டு நடத்தவேண்டிய முறை தொடர்பில் பணிப்புரைகளை விடுப்பதற்கான அதிகாரத்தினைக் கொண்டிருக்கிறது.

2. **செயற்பரப்பு மற்றும் ஏற்புடைத்தன்மை**

2.1 இப்பணிப்புரைகள் முகவராண்மைகள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் ஊடாக நடத்தப்படும் தொழிற்பாடுகள் உட்பட அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

3. **தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு**

3.1 இப்பணிப்புரைகளுக்கான அட்டவணை I இலுள்ள (இதனகத்துப்பின்னர் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினால் விதிக்கப்படும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதனை அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

3.2 ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிலுள்ள தேவைப்பாடுகள் முகவராண்மைகள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் ஊடாக நடத்தப்படுகின்ற தொழிற்பாடுகள் உட்பட, உரிமம்பெற்ற வங்கிகளின் அனைத்து தொழிற்பாடுகளுக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

4. **சபையின் பொறுப்புக்கள்**

4.1 உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபை ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பில் குறித்துரைக்கப்பட்ட தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தலை உரிமம்பெற்ற வங்கிகள் நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்குப் போதுமான மேற்பார்வை வழிமுறைகளை நிறுவிக்கொள்ளுதல் வேண்டும்.

5. **ஆளுகைக் கட்டமைப்பு**

5.1 தொழில்நுட்பவியல் இடர்நேர்வுகளின் முன்மதியுடைய முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்காக ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் 4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகும் விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட காத்திரமான ஆளுகைக் கட்டமைப்பொன்றினை உரிமம்பெற்ற வங்கிகள் நிறுவிக்கொள்ளுதல் வேண்டும்.

6. **மேற்பார்வை மீளாய்வுச் செயன்முறையின் கீழ் தொழில்நுட்பவியல் இடர்நேர்வினை மதிப்பிடல்**

6.1 உரிமம்பெற்ற வங்கிகள், வங்கியின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செய்முறையிலுள்ள இடர்நேர்வுகளின் அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீட்டின் ஒரு பகுதியாக தொழில்நுட்பவியல் இடர்நேர்வு மதிப்பிடப்பட்டது என்பதனையும் ஏதேனும் சாத்தியமான இடர்நேர்வு தொழில்நுட்பவியல் இடர்நேர்வுகளை எதிர்கொள்வதற்கு மூலதனத்தினை போதுமான மட்டத்தில் வைத்திருத்தல் வேண்டும் என்பதனையும் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

7. **உள்ளகக் கணக்காய்வின் வகிபாகம்**

7.1 உரிமம்பெற்ற வங்கிகளின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கிக்கொள்ளப்பட்டமையினை உறுதிப்படுத்தும் விதத்தில் அவற்றை மதிப்பீடு செய்து சபைக் கணக்காய்வுக் குழுவினூடாக, குறைந்தபட்சம் ஆண்டிற்கொருதடவையாவது உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடல் வேண்டும்.

8. **இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்**

8.1 இப்பணிப்புரைகளின் திகதியிலிருந்து தகவல்முறைமைக் உட்கட்டமைப்பு சொத்துடமை, முகாமைத்துவம் மற்றும் அமைவிடம் என்பனவற்றின் அடிப்படையில் தேவைப்பாடுகள் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் 9ஆவது பிரிவுடன் இணங்குகின்ற விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகள் அனைத்து புதிய தொழில்நுட்பவியல் முன்னெடுப்புக்களையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

8.2 நடைமுறைப்படுத்தல் மற்றும் இடைக்கால ஏற்பாடுகள் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் 10 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் சரியான நேரத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் மற்றைய அனைத்து தேவைப்பாடுகளுடனும் இணங்கிக்கொள்ளப்பட்டமையினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

8.3 உள்நாட்டு முறையியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்ற வங்கிகள் என குறித்துரைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள், உள்நாட்டு முறையியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்ற வங்கிகள் என குறித்துரைக்கப்பட்டு அறிவித்தல் விடுக்கப்பட்ட நாளிலிருந்து அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் பிரிவின்படி, இதில் எது பின்னர் வருகின்றதோ அத்திகதியிலிருந்து 12 மாதத்திற்குள் உள்நாட்டு ரீதியாக முக்கியத்துவம் பெற்ற வங்கிகள் விசேடமாக ஏற்புடைத்தான தேவைப்பாடுகளுடன் இணங்கிக்கொள்வதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்

உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

# அட்டவணை I

## உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

1. குறிக்கோள்

இக்கட்டமைப்பானது பொதுவாக, உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் அதேபோன்று தரவுகளின் உணர்திறன், தகவல் முறைமைகளின் இன்றியமையாமை மற்றும் பயன்படுத்தப்படுகின்ற தகவல் முறைமையின் வகை தொடர்பான குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் ஏற்படுத்தப்படுவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2. ஏற்புடைத்தன்மை

2.1 இக்கட்டமைப்பின் தேவைப்பாடுகள் முகவராண்மைகள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரூடாக மேற்கொள்ளப்படும் தொழிற்பாடுகள் உட்பட, உரிமம்பெற்ற வங்கிகளின் முழுத்தொழிற்பாடுகளுக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

2.2 ஆரம்ப, அனர்த்த மீட்பு, மற்றும் வேறேதேனும் வகைகள் உட்பட உரிமம்பெற்ற வங்கிகளினால் பயன்படுத்தப்படும் அனைத்து தகவல் முறைமைகளும் தொடர்பான உட்கட்டமைப்பும் இக்கட்டமைப்பில் குறித்துரைக்கப்படுகின்ற தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

3. வரைவிலக்கணங்கள்

இக்கட்டமைப்பின் நோக்கங்களுக்காக பின்வரும் வரைவிலக்கணங்கள் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

3.1 தரவு

3.1.1 பொதுத் தரவு

பயன்படுத்துவதற்கு ஒவ்வொருவருக்கும் கட்டுப்பாடின்றி கிடைக்கக்கூடியதும் எந்தவொரு கட்டுப்பாடுமின்றி மீளவெளியிடப்படக்கூடியதுமான தரவுகள்.

3.1.2 வாடிக்கையாளர் தரவு

கடந்தகால, தற்போதுள்ள அல்லது வாடிக்கையாளர்களாக வரக்கூடியவர்கள் தொடர்பான பொதுத் தரவுகளல்லாத ஏதேனும் தரவுகள். எனினும், அடையாளம் காணப்படாத வாடிக்கையாளரின் தரவுகள், வாடிக்கையாளர் தரவுகளாகக் கருதப்படமாட்டா.

3.1.3 அடையாளம் காணப்படாத வாடிக்கையாளர் தரவு

வேண்டுமென்றே மாற்றியமைக்கப்பட்ட தரவுகளை, தரவுகள் உண்மையில் யாருடன் தொடர்புபட்டனவாக இருக்கின்றதோ அந்த வாடிக்கையாளர்களை அடையாளம் காண்பதற்கு தனியாகவோ அல்லது வேறுஏதேனும் தரவுடன் இணைத்தோ பயன்படுத்தக்கூடாது.

3.1.4 இரகசியமான வாடிக்கையாளரல்லாதவர் தரவுகள்

வாடிக்கையாளர் தரவுகளின் வரைவிலக்கணத்திற்குள்வராத ஏதேனும் பொதுவானவையல்லாத தரவுகள் உரிமம்பெற்ற வங்கிகளின் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள், பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவத்திற்கான சமர்ப்பிப்புக்கள், உணர்வுபூர்வமான ஊழியர் தரவுகள் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் தரவுகள் உள்ளிட்டவற்றை தீய நோக்குடன் பயன்படுத்துமிடத்து அல்லது கசியவிடுமிடத்து அவை கணிசமானளவு நிதியியல் அல்லது அவற்றின் கீர்த்தி தொடர்பான இழப்புக்களுக்குக் காரணமாகலாம்.

3.2 மிகமுக்கியமான தகவல் முறைமைகள்

நாட்டின் நிதியியல் முறைமையின் தொழிற்பாடுகளுக்கு அத்துடன்/ அல்லது உரிமம்பெற்ற வங்கியின் தகவல் முறைமைகள் மற்றும் மூன்றாம் தரப்புப் பணி வழங்குபவர்கள் மற்றும் முகவர்கள் தொடர்பான தகவல் முறைமைகள் உட்பட, உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் அடையாளம் காணப்பட்டவாறான உரிமம்பெற்ற வங்கியின் தகவல்களுக்கான இன்றியமையாததான ஏதேனும் தகவல் முறைமை.

### 3.3 மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர்

உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றின் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றினால் வெளியிலிருந்து பெறப்படும் வியாபாரப் பணிகள் தொடர்பில் 2012ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையில் அல்லது தொடர்ந்துவரும் ஏதேனும் பணிப்புரையில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்வது பற்றிய ஏற்பாட்டினை உரிமம்பெற்ற வங்கி யாருடன் செய்துள்ளதோ அந்த பணி வழங்குபவர்.

### 3.4 முகவராண்மை

உரிமம்பெற்ற வங்கிகளின் முகவராண்மைகளை நியமிப்பது தொடர்பில் 2018ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையில் அல்லது தொடர்ந்து வந்த பணிப்புரைகளில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான முகவரொருவர் அல்லது துணை முகவரொருவர்.

### 3.5 தத்துவம்பெற்ற சான்றுபடுத்தல் நிறுவனம்

குறித்துரைக்கப்பட்ட பன்னாட்டு தரப்படுத்தல் அமைப்பின் நியமத்திற்கிணங்க மதிப்பீட்டிற்கான இலங்கைத் தத்துவ சபையினால் தத்துவம் வழங்கப்பட்ட முகாமைத்துவ முறைமை சான்றுபடுத்தல் நிறுவனம் அல்லது பன்னாட்டு தத்துவமொன்றின் உறுப்பினராகவுள்ள தத்துவம் பெற்ற அமைப்பொன்று.

### 3.6 உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள்

உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் என குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் உரிமம்பெற்ற வங்கிகளை கையாள்வதற்கான கட்டமைப்பு மீது 2019ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின்படி அல்லது அதனைத்தொடர்ந்து வந்த ஏதேனும் பணிப்புரைகளின் படி உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்ற வங்கிகள்.

### 3.7 பணிப்பாளர்கள் சபை

இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளைப் பொறுத்தவரை வங்கியின் பணிப்பாளர் சபையென கருத்தப்படுதல் வேண்டும். இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கியைப் பொறுத்தவரையில், இலங்கையின் தொழிற்பாடுகளுக்கும் பொறுப்பான தலைமை அலுவலகங்களுடன் சேர்ந்த இலங்கையிலுள்ள மிக மூத்த முகாமைத்துவக் குழு அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள பொருத்தமான உயர்மட்டக் குழு.

### 3.8 சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துக் குழு

இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளைப் பொறுத்தவரை வங்கியின் பணிப்பாளர் சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு என அர்த்தப்படும். இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளைப் பொறுத்தவரை இது உள்நாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் குழு அல்லது அத்தகைய இடர்நேர்வு முகாமைத்துவக் குழு இல்லாதவிடத்து தலைவர், தலைமை அலுவலகத்திலுள்ள இடர்நேர்வு முகாமைத்துவ தொழிற்பாட்டுடன் கூடிய அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள பொருத்தமான ஏதேனும் உயர்மட்டக் குழு எனப் பொருள்படும்.

### 3.9 சபைக் கணக்காய்வுக் குழு

இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகிளைப் பொறுத்தவரை இது வங்கிப் பணிப்பாளர் சபையின் கணக்காய்வுக் குழு எனப் பொருள்படும். இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கியைப் பொறுத்தவரை இது தலைமை அலுவலகத்தில் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளுடன் கூடிய இலங்கையிலுள்ள உள்ளக கணக்காய்வின் தலைவர் அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள பொருத்தமான ஏதேனும் உயர்மட்டக் குழு எனப் பொருள்படும்.

4. ஆளுகைக் கட்டமைப்பு

4.1 தகவல் பாதுகாப்புக் குழு

4.1.1 வங்கியின் தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் புத்துயிரளித்தலுக்குப் பொறுப்பான உச்ச முகாமைத்துவ மட்ட சபையாக உரிமம்பெற்ற வங்கிகள் தகவல் பாதுகாப்புக் குழுவொன்றினை நிறுவுதல் வேண்டும். குழுவானது தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் உபாயம் மற்றும் தொழிற்பாட்டு அம்சங்கள் ஆகிய இரண்டிற்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

4.1.2 தகவல் பாதுகாப்புக் குழுவின் கூட்டத்திற்கு வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலர் தலைமை தாங்குதல் வேண்டும். முதன்மை நிறைவேற்று அலுவலர் கூட்டத்தில் கலந்துகொள்ளமுடியாத வேளையில் உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபை தகவல் பாதுகாப்புக் குழுவின் கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கு ஒன்று அல்லது அதற்குக் கூடுதலான துணைத் தலைவர்களை நியமித்தல் வேண்டும்.

4.1.3 முதன்மை தொழிற்பாட்டு அலுவலர்/ தொழிற்பாடுகளின் தலைவர், முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர், முதன்மை தகவல் அலுவலர்/ தலைவர் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தலைவர்/ பாதுகாப்புத் தொழிற்பாடுகள் மையத்தின் முகாமையாளர்/ பாதுகாப்புத் தொழிற்பாடுகள் மையத்தின் இணைப்பாளர்/ பாதுகாப்புக் குழுவின் மற்றைய பதவிவழி உறுப்பினர்களாவர். சட்டத் துறைத் தலைவர், மனித வளங்கள் முகாமைத்துவத் துறைத் தலைவர் பாதுகாப்புத் துணைத் தலைவர் ஆகியோர் அவர்களது துறைகள் பற்றி கலந்துரையாடப்படும் நேரத்தில் இணைத் தலைவர்களாக கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவர். பணிப்பாளர் சபையின் தற்றுணிபின் அடிப்படையில் அவர்களை நிரந்தர உறுப்பினர்களாக நியமிக்கலாம். இடர்நேர்வு முகாமைத்துவத் தலைவர் மற்றும் இணங்குவிப்பு அலுவலர் ஆகியோர் தகவல் பாதுகாப்புக் குழுவின் நிரந்தர அழைப்பாளர்களாக இருத்தல் வேண்டும். உள்ளகக் கணக்காய்வாளர் திணைக்களத் தலைவர் தகவல் பாதுகாப்புத் தொடர்பில் கண்டறியப்பட்ட உள்ளகக் கணக்காய்வு விடயங்களை சமர்ப்பிப்பதற்காக குறைந்தபட்சம் காலாண்டு அடிப்படையிலாவது அழைக்கப்படல் வேண்டும். வங்கியின் இடர்நேர்வு, இணங்குவிப்பு அல்லது உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளிலிருந்தான மற்றைய எவரேனும் அலுவலர்கள் அழைப்பின் மீது மட்டுமே கலந்துகொள்ளுதல் வேண்டும்.

4.1.4 இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளைப் பொறுத்தவரை, தலைமை அலுவலகத்தில் பெரும்பாண்மையாக தொழில்நுட்பவியலுடன் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படுமிடத்து, இலங்கையின் தொழிற்பாடுகளுக்கான நாட்டுத் தலைவருக்குச் சமமான அல்லது உயர்ந்த மூப்புடன்கூடிய பொருத்தமான போதுமான அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் தலைவருடன் சேர்த்து தலைமை அலுவலகத்திலிருந்து தகவல் பாதுகாப்புக் குழுவின் பதவிவழி உறுப்பினரொருவர் நியமிக்கப்படல் வேண்டும்.

4.1.5 இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள் பிரிவு 4.1.3இல் பெயரிடப்பட்ட எவரேனும் அலுவலர்கள் இலங்கைக் கிளையின் நிறுவன அமைப்பில் இல்லாத போது தமது தலைமை அலுவலகத்திலிருந்து தகவல் பாதுகாப்புக் குழுவிற்கு தொடர்பான அலுவலரை நியமித்தல் வேண்டும்.

4.1.6 தகவல் பாதுகாப்புக் குழு, சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவினூடாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும். தகவல் பாதுகாப்புக் குழு அதன் நடவடிக்கைகள் பற்றி சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவிற்கு குறைந்தபட்சம் காலாண்டு அடிப்படையிலாவது அறிவித்தல் வேண்டும்.

4.1.7 தகவல் பாதுகாப்புக் குழு குறைந்தபட்சம் ஒவ்வொரு இரண்டு மாதத்திற்கும் ஒரு தடவையாவது சந்தித்தல் வேண்டும் என்பதுடன் கூட்ட நிறைவெண்ணும் விசாரணை நியதிகளும் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்

4.2.1 உரிமம்பெற்ற வங்கிகள், முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரொருவரை உரிமம்பெற்ற வங்கியின் தகவல் பாதுகாப்பிற்குப் பொறுப்பான நிறைவேற்று அலுவலராக நியமித்தல் வேண்டும்.

4.2.2 முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரானவர் வங்கியின் மூத்த முகாமைத்துவக் குழுவின் உறுப்பினரொருவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் உரிமம்பெற்ற வங்கியில் நிறுவன ரீதியான அமைப்பில் முதன்மை நிறைவேற்று அலுவலருக்கு உடனடியாக இரண்டு அடுக்குகளுக்கு கீழேயுள்ள மட்டத்தில் இருத்தலும் வேண்டும்.

4.2.3 முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் முதன்மை நிறைவேற்று அலுவலருக்கு அறிக்கையிடுதல் வேண்டும் அல்லது உரிமம்பெற்ற வங்கியின் தொழிற்பாட்டு நடவடிக்கைக்கு முதன்மை தொழிற்பாட்டு அலுவலர் ஒட்டுமொத்தமாக பொறுப்பாக இருக்கும்போது முதன்மை தொழிற்பாட்டு அலுவலருக்கு அல்லது மேலே குறிப்பிடப்பட்டவாறு முதன்மை தொழிற்பாட்டு அலுவலரின் வகிபாகத்தினை ஒத்த வகிபாகத்தினைக் கொண்டிருக்கும் கம்பனி முகாமைத்துவ உறுதிப்பினரொருவருக்கு அறிக்கையளித்தல் வேண்டும்.

4.2.4 உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கி சிறப்பு முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரொருவரை நியமித்தல் வேண்டும்.

4.2.5 பிரிவு 4.2.4இல் உள்ள தேவைப்பாட்டிற்கான இடைக்கால ஏற்பாடொன்றாக உள்நாட்டு முறையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கி 4.2.6இன் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகும் விதத்தில் வங்கியின் தற்போதுள்ள மூத்த முகாமைத்துவக் குழுமத்திலிருந்து சமகாலத்தில் தொழிற்படும் விதத்தில் இரண்டு ஆண்டு காலப்பகுதிக்கு முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலராக அலுவலரொருவரை நியமித்தல் வேண்டும்.

4.2.6 உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்திராத உரிமம்பெற்ற வங்கிகள், பணிப்பாளர் சபை உரிமம்பெற்ற வங்கியினால் எதிர்நோக்கப்படும் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் பாதுகாப்பு இடர்நேர்வுகளின் அளவு சிறப்பு முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரொருவரை நியமிப்பதனை தேவைப்படுத்தவில்லை என்ற தீர்மானத்தினைக் கொண்டிருக்குமிடத்து, முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலராக சமகாலத்தில் தொழிற்படுதவற்கு வங்கியின் தற்போதுள்ள மூத்த முகாமைத்துவக் குழுமத்திலிருந்து அலுவலரொருவரை நியமிக்கலாம். எவ்வாறெனினும், அத்தகைய அலுவலரொருவர் தகவல் தொழில்நுட்பத்தின் தலைவராகவோ, உள்ளகக் கணக்காய்வின் தலைவராகவோ, இடர்நேர்வு முகாமைத்துவத்தின் தலைவராகவோ, இணங்குவிப்பு அலுவலராகவோ அல்லது அவர்களின் கீழுள்ள ஒருவராகவோ இருத்தலாகாது.

4.2.7 முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் உரிமம்பெற்ற வங்கி முழுவதிலும் தகவல் பாதுகாப்புக் கொள்கைகளும் நடைமுறைகளும் காத்திரமான விதத்தில் நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் அனுபவமுடையவராகவும் உரிமம்பெற்ற வங்கியின் நிறுவன ரீதியான அமைப்பு மட்டத்தில் மிக மூத்தவராகவும் தகவல் பாதுகாப்பு தொழிற்பாட்டிற்கு தலைமைத்துவத்தினை வழங்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

4.2.8 முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர், பிரிவு 10 இலுள்ள இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட கால வரையறைக்குள் பிரிவு 7இல் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறான தகைமைகளைக் கொண்டிருத்தல் அல்லது பெற்றிருத்தல் வேண்டும்.

4.2.9 இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ளவையும் தகவல் பாதுகாப்புடன் தொடர்பான கொள்கை வகுப்புக்களை இலங்கைக்கு வெளியே கையாளும் தன்மையினைக் கொண்டுள்ளவையுமான உரிமம்பெற்ற வங்கிகள், இலங்கையில் தொழிற்படுவதற்காக தலைமை அலுவலகத்திலிருந்து முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரொருவரை போதுமான அதிகாரங்களுடன் நியமித்தல் வேண்டும். அத்தகைய அலுவலர் 4.2.8இல் தேவைப்படுத்தப்பட்டவாறாக சரியான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்ற தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படலாம். எனினும், அவர் வங்கியின் தலைமை அலுவலகத்தின் மனித வளங்கள் தலைவரினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு தகவல் பாதுகாப்பில் போதுமான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.2.10 உரிமம்பெற்ற வங்கியின் பணிபாளர் சபை, பிரிவு 10இல் உள்ள இடைக்கால ஏற்பாடுகளுக்கிணங்க முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரொருவர் நியமிக்கப்படும் வரை, முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலருக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான ஏற்பாடுகளை நிறுவிக்கொள்ளுதல் வேண்டும்.

## 4.3 மிகமுக்கியமான தகவல் முறைமைகளை அடையாளம் காணுதல்

4.3.1 பணிப்பாளர்கள் சபை, 4.3.2 மற்றும் 4.3.3இன் தேவைப்பாடுகளுக்கிணங்க, 3.2இல் வழங்கப்பட்டுள்ள மிகமுக்கியமான தகவல் முறைமையின் வரைவிலக்கணத்திற்குள் வரும் தகவல் முறைமைகளை அடையாளம் காணுதல் வேண்டும்.

4.3.2 மிகமுக்கியமான தகவல் முறைமைகள் வழமையாக கொடுக்கல்வாங்கல் செய்முறைப்படுத்தல் முறைகள், பொதுப் பேரேட்டு முறைமைகள், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுடன் தொடர்பான முறைகள், விநியோகமார்க்கங்கள், பணம் தூயதாக்கலை தடைசெய்தல்/ உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள் நடைமுறைகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற முறைமைகள் மற்றும் வங்கித்தொழில் வியாபாரத்தின் தடங்கலற்ற நடத்தைகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான வேறு ஏதேனும் முறைமை என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

4.3.3 உரிமம்பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளர்கள் சபை, தொடர்பான தகவல் முறையானது பணிப்பாளர் சபையின் அபிப்பிராயத்தின்படி, மிகமுக்கியமான தகவல் முறைமையின் வரைவிலக்கணத்திற்குள் வரவில்லை எனக் கருதுமாயின், 4.3.2இல் குறிப்பிடப்பட்ட கொடுக்கல்வாங்கல் செய்முறைப்படுத்தல் முறைமைகள், பொதுப் பேரேட்டு முறைமைகள், மற்றும் லங்கா செட்டில் முறைமையுடன் தொடர்பான தகவல் முறைமைகள் அல்லது மிகமுக்கியமானவை என அடையாளம் காணப்பட்டுள்ளவற்றிலிருந்து லங்கா செட்டில் முறைமையிலுள்ள வங்கியின் கடப்பாடுகளை நிறைவேற்றுகின்ற தேவைப்பாடுகள் தவிர்ந்த, வேறுஏதேனும் தகவல் முறைமைகளை விலக்கிவிட முடியும். அத்தகைய விலக்கல்கள் உள்ளக ரீதியாக நிறுவப்பட்டுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் முறையியலொன்றின் அடிப்படையில் இருத்தல் வேண்டும். அத்தகைய அனைத்து விலக்கல்கள் குறைந்தபட்சம் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்குமொருமுறையாவது மீளாய்வு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விலக்கலுக்குப் பின்னாலுள்ள அடிப்படைக் காரணங்களை போதுமானளவிற்கு விபரமான முறையில் விளக்கும் விதத்தில் ஆவணப்படுத்தலும் வேண்டும்.

4.3.4 உரிமம்பெற்ற வங்கிகள் வெளியிலிருந்து பணிகளை வழங்குகின்ற மூன்றாம் தரப்பினர் மற்றும் முகவர்களுடன் தொடர்பான தகவல் முறைமைகள் உட்பட, பயன்படுத்தப்பட்ட அனைத்து தகவல்களையும் பதிவுசெய்கின்ற பதிவேடொன்று பேணப்படல் வேண்டும் என்பதுடன் தகவல் முறைமைகள் ஒன்றில் மிகமுக்கியமான தகவல் முறையானதா அல்லது இல்லையா என்பதனையும் தகவல் முறைமை உள்ளாகக்கூடிய தரவின் வகையினையும் தெளிவாக அடையாளம் காணுதலும் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள் இந்நோக்கத்திற்காக ஏற்கனவேயுள்ள ஏதேனும் பதிவேட்டினை/ தகவல் முறைமைகளின் பட்டியலைப் பயன்படுத்தலாம்.

4.4 **வாடிக்கையாளர் தரவுகளின் நியாயமானதும் ஒழுக்கவியல் சார்ந்ததுமான பயன்பாடு**

உரிமம்பெற்ற வங்கிகள் வாடிக்கையாளர் தரவுகளை, அத்தகைய தரவுகள் வங்கிகளினால் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என வாடிக்கையாளர் எதிர்பார்க்கின்றார்களோ அவ்வாறு மாத்திரமே பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். எல்லா நேரங்களிலும் வாடிக்கையாளர் தரவுகள் நியாயமாகவும் ஒழுக்கவியல் சார்ந்த முறையிலும் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபை காத்திரமான கொள்கைகளையும் நடைமுறைகளையும் நடைமுறைப்படுத்தல் வேண்டும். மேலும் சட்டத்தின் மூலம் வழங்கப்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டாலொழிய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அத்தகைய தரவுகளை வெளிப்படுத்தலாகாது.

4.5 **பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடல்**

உரிமம்பெற்ற வங்கிகள், வங்கியின் தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை ஏதேனும் தகவல் பாதுகாப்பு சம்பவங்களுடன் சேர்த்து நியம இடர்நேர்வுக் குறிகாட்டிகளையும் அவ்வப்போதைய அறிக்கைகளையும் பயன்படுத்தி சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவினூடாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கையளிப்பதற்கான நடைமுறையினை நிறுவிக்கொள்ளுதல் வேண்டும்.

4.6 **தொழில்நுட்வியல் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடு**

4.6.1 உரிமம்பெற்ற வங்கிகள், வங்கியின் இடர்நேர்வுத் தொழிற்பாடுகள் வங்கியினால் எதிர்நோக்கப்படும் தொழில்நுட்ப இடர்நேர்வின் அளவிற்கு ஈடான விதத்தில் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவத்தில் முதிர்ச்சி மட்டமொன்றினைக் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவதிற்கான இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட அலுவலர் மற்றும் ஏனைய மூலவளங்களின் மட்டம் இடர்நேர்வு முகாமைத்துவத் தலைவரின் ஆலோசனையுடன் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவினால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

4.6.2 பணிப்பாளர் சபை, தொழில்நுட்பவியல் இடர்நேர்வேற்பு தெளிவாக விபரிக்கப்பட்ட கட்டமைப்பொன்றினூடாக வரைவிலக்கணம் செய்யப்படுவதனையும் அளவிடத்தக்க தொழில்நுட்பவியல் இடர்நேர்வுக் குறிகாட்டிகளை ஒப்புதலளிக்கப்பட்ட இடர்நேர்வின் தாங்கிக்கொள்ளக்கூடிய மட்டத்துடன் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4.6.3 உரிமம்பெற்ற வங்கிகள், தொழில்நுட்பவியல் இடர்நேர்வினை, வங்கியின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செய்முறையிலுள்ள இடர்நேர்வுகளின் அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீட்டின் ஒரு பகுதியாக மதிப்பிடல் வேண்டும்.

4.6.4 உரிமம்பெற்ற வங்கிகள் புதிய தொழில்நுட்பத்தினால் தூண்டப்பட்ட சாதனங்கள் அல்லது பணிகள் அறிமுகப்படுத்தப்படும் போது, அல்லது அத்தகைய சாதனங்களுக்கு அல்லது பணிகளுக்கு மாற்றங்களைச் செய்யும் போது, பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கடுமையான சாதன ஒப்புதல் செய்முறைகளை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் மென்பொருள் தரங்களின் உத்தரவாதம், உள்ளகக் கட்டுப்பாடுகள், மற்றும் பின்பற்றப்படுகின்ற இடர்நேர்வு முகாமைத்துவ வழிமுறைகள் என்பன மீது கவனத்தினைச் செலுத்துதலும் வேண்டும்.

4.6.5 உரிமம்பெற்ற வங்கிகள் அவற்றின் வியாபார அலகுகள் கொடுப்பனவு அட்டைகள் மற்றும் இலத்திரனியல் வங்கித்தொழில் போன்ற தொழில்நுட்பவியலால் தூண்டப்பட்ட வங்கித்தொழில் சாதனங்கள் மற்றும் பணிகளுக்குப் பொறுப்பாக இருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் பாதுகாப்புடன் தொடர்பான பணி வழங்கல் தொழிற்பாடுகள் காலாண்டு இடர்நேர்வு மற்றும் சுயகட்டுப்பாட்டு மதிப்பீட்டு செய்முறையின் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு என்பனவற்றிற்கு உட்பட்டதாகும்.

4.6.6 உரிமம்பெற்ற வங்கியின் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறு, மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் மற்றும் முகவர்களினால் மேற்கொள்ளப்பட்ட மிகமுக்கியமான மற்றும் உணர்வு பூர்வமான பணிகளுக்கு ஏற்ற அத்தகைய மூன்றாம் தரப்பு பணி வழங்குவோருக்கும் முகவர்களுக்குமாக இடர்நேர்வு மற்றும் கட்டுப்பாட்டு சுயமதிப்பீட்டு செய்முறைகள் உட்பட, உரிமம்பெற்ற வங்கிகள் போதுமான தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

4.7 உள்ளகக் கணக்காய்வு

4.7.1 தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவத்துடன் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மற்றும் ஏனைய இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவசதிகளிலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவது, குறைந்தபட்சம் வருடாந்த உள்ளகக் கணக்காய்வு வருடாந்தம் நடைபெறுகிறது என்பதற்கு உட்பட்டதாகும்.

4.7.2 உரிமம்பெற்ற வங்கிகளின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் வெளியாட்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள போதும்கூட சபை கணக்காய்வுக் குழு உரிமம்பெற்ற வங்கிகள் 4.7.1 இலுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5. தகவல் பாதுகாப்பு

5.1 தகவல் பாதுகாப்பு பயிற்சி மற்றும் சான்றளித்தல்

5.1.1 பணிப்பாளர் சபைக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு

(i) உரிமம்பெற்ற வங்கிகள், கீழேயுள்ள தேவைப்பாடுகளுக்கிணங்க பணிப்பாளர் சபைக்காக தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பில் கீழுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் வருடாந்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

(ii) அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள் யாதெனில், தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள், வங்கியின் நடைமுறைகளின் போதுமாந்தன்மை மற்றும் காத்திரமான தன்மைகள் தொடர்பில் பணிப்பாளர் சபை காத்திரமான மேற்பார்வையினை கொண்டிருப்பதனை இயலுமைப்படுத்துவதேயாகும்.

(iii) தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மற்றும் ஏனைய ஏற்புடைத்தான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளிலுள்ள தேவைப்பாடுகளின் நியதிகளில், பணிப்பாளர் சபையினதும் சபைக் குழுக்களினதும் பொறுப்புக்கள் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களூடாக உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(iv) அத்தகைய பயிற்சி குறைந்தபட்சம் தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவ நிபுணர்களினால் ஒவ்வொரு ஆண்டும் கட்டமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினையும் ஒன்று அல்லது கூடுதலான விழிப்புணர்வு அமர்வுகளையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(v) உரிமம்பெற்ற வங்கியின் சபைச் செயலாளர் பணிப்பாளர் சபைக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு தொடர்பான மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5.1.2 அலுவலர்களுக்கான தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி மற்றும் சான்றுபடுத்தல் தேவைப்பாடுகள்

(i) உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற வங்கிகளின் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் மிகமுக்கியமான தகவல் முறைமைகளுக்கு உள்ளாகின்ற அல்லது உள்ளாகக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதனையும் அத்துடன் வாடிக்கையாளர் தரவு அல்லது இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத் தரவுகளில் பயிற்சியளிக்கப்படுவதனையும் பின்வரும் தேவைப்பாடுகளுக்கிணங்க தகவல் பாதுகாப்புத் தொடர்பில் சான்றுபடுத்தப்படுவதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(அ) தகவல் பாதுகாப்பு கொள்கை மற்றும் உரிமம்பெற்ற வங்கியின் நடைமுறைகள் என்பனவற்றின் அடிப்படையில் தேவைப்படுத்தப்பட்ட ஆட்கள் உரிமம்பெற்ற வங்கியின் தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தினை நிறைவுசெய்தல் வேண்டும்.

(ஆ) 5.1.2(i)(அ) இன்படி, அத்தகைய நிகழ்ச்சித்திட்டமானது பயிற்சிபெறுபவரின் தகவல் பாதுகாப்புப் பொறுப்புக்களுக்கு ஏற்ற விதத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் வங்கியின் தகவல் பாதுகாப்புக் கொள்கைகள் எப்பொழுதெல்லாம் இற்றைப்படுத்தப்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் இவையும் கிரமமான முறையில் இற்றைப்படுத்தப்படல் வேண்டும்.

(இ) தேவைப்படுத்தப்பட்ட ஆட்கள் தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சியை அடிப்படையாகக் கொண்ட உள்ளகச் சான்றிதழ் வழங்கும் பரீட்சையை குறைந்தபட்சம் ஆண்டு தோறுமாவது நிறைவுசெய்தல் வேண்டும்.

**(ii)** முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் போதுமானளவு விழிப்புணர்வு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுமிடத்து உரிமம்பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளர் சபை அத்தகைய முகவர்கள் அல்லது மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரின் அலுவலர்களுக்கு 5.1.2(i) இன் தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கலாம்.

### 5.2 பயன்படுத்துநர் அணுகு முகாமைத்துவம்

#### 5.2.1 செயற்பரப்பு

**(i)** பயன்படுத்துநர் அணுகு முகாமைத்துவம் தொடர்பான 5.2.2 மற்றும் 5.2.3 தேவைப்பாடுகள் வாடிக்கையாளர் தரவுகளை வெளிப்படுத்துகின்ற மிகமுக்கியமான தகவல்முறைமை மற்றும் தகவல் முறைமைகளுக்கும் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

**(ii)** இரகசியமான வாடிக்கையாளர் அல்லாதவர்களின் தரவுகளை வெளிப்படுத்தும் மிகமுக்கியமான தகவல் முறைமைகளுக்காக 5.2.2 மற்றும் 5.2.3 இனால் விதிக்கப்படும் தேவைப்பாடுகளை பிரயோகிப்பதன் அவசியம் பற்றி பணிப்பாளர் சபையானது ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்புக் குழு என்பனவற்றின் ஆலோசனையுடன் தீர்மானத்தினை மேற்கொள்ளலாம்.

**(iii)** 5.2.4இல் உள்ள தேவைப்பாடுகள் குறித்துரைக்கப்பட்டவாறு அனைத்து தகவல் முறைமைகளுக்கும் பியோகிக்கப்படுதல் வேண்டும்.

#### 5.2.2 பயன்படுத்துநர் அணுகு தன்மை மற்றும் அடையாள முகாமைத்துவ முறைமை

**(i)** உரிமம்பெற்ற வங்கிகள் சிறப்புரிமையை பெற்ற பயன்படுத்துநர்கள் உட்பட அனைத்து பயன்படுத்துநர்களையும் முகாமைப்படுத்துவதற்காக தொழில்துறை நியம பயன்படுத்துநர் அணுகுமுறைமையினையும் அடையாள முகாமைத்துவ முறைமையொன்றினையும் (முறைமைகளையும்) நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

**(ii)** உரிமம்பெற்ற வங்கிகள் தொழில்நியம பயன்படுத்துநர் அணுகு தன்மை மற்றும் அடையாள முகாமைத்துவ முறைமையொன்றின் நடைமுறைப்படுத்தல் சாத்தியமில்லாத போது ஏதேனும் தற்போதுள்ள தகவல் முறைமைகளுக்காக, 5.2.2(i) இலுள்ள தேவைப்பாடுகளிலிருந்து விலகி பொருத்தமான அதற்குப்பதிலான கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தலாம். அத்தகைய அனைத்து தகவல் முறைமைகளும் 5.2.4(i)(அ) இல் குறித்துரைக்கப்பட்ட காலஇடை வெளிப்படி, பயன்படுத்துநர் அணுகு தளச் சிறப்புரிமை மீளாய்வுகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

#### 5.2.3 சிறப்புரிமை பெற்ற பயன்படுத்துநர்கள்

சிறப்புரிமை பெற்ற பயன்படுத்துநர்கள் அணுகுவசதியை “கொண்டிருப்பது அவசியம்” என்ற அடிப்படையில் மாத்திரமே வழங்க வேண்டும் என்பதுடன் உயர்ந்த மட்ட அணுகு தளம், அத்தகைய அணுகுவசதி தேவைப்படும் போது மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்திற்கு வழங்கப்படல் வேண்டும்.

#### 5.2.4 பயன்படுத்துநர் அணுகு தளச் சிறப்புரிமை மீளாய்வுகள்

**(i)** உரிமம்பெற்ற வங்கிகள் பயன்படுத்தநர் அணுகு தளச் சிறப்புரிமை மீளாய்வினை பின்வருமாறு மேற்கொள்ளுதல் வேண்டும்:

(அ) மிகமுக்கியமான தகவல் முறைமைகளைப் பொறுத்தவரை குறைந்தபட்சம் மாதாந்த அடிப்படையில்

(ஆ) வாடிக்கையாளர் தரவுகளையும் இரகசியமான வாடிக்கையாளர் அல்லாதவர் தரவுகளையும் காட்டுகின்ற மிகமுக்கியமல்லாத தகவல் முறைமைகளைப் பொறுத்தவரை குறைந்தபட்சம் காலாண்டு அடிப்படையில்

(இ) இணைக்கப்பட்ட கணக்குகளின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கிணங்க பொருத்தமான முறையியலொன்றினைப் பயன்படுத்தி இலத்திரனியல் விநியோக மார்க்கங்கள் உட்பட வங்கியின் ஏதேனும் தகவல் முறைமையினைப் பயன்படுத்துவதற்கு பதிவுசெய்யப்பட்டுள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளைப் பொறுத்தவரை குறைந்தபட்சம் வருடாந்த அடிப்படையில்

(ஈ) மற்றைய அனைத்து தகவல் முறைமைகளையும் பொறுத்தவரை குறைந்தபட்சம் வருடாந்த அடிப்படையில்

**(ii)** பயன்படுத்துநர் அணுகு தளச் சிறப்புரிமை மீளாய்வின் நோக்கம், தகவல் முறைமையொன்றிலுள்ள அனைத்து பயன்படுத்துநர்களும் அவர்களது பயன்படுத்துநர் விபரங்களும் வழங்கப்பட்ட சிறப்புரிமைகள் மற்றும் அத்தளத்திற்கான செல்லுபடியாகக்கூடிய அதிகாரவளிப்புக்களை கொண்டிருக்கச் செய்வதேயாகும்.

**(iii)** தகவல் பாதுகாப்புக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறு பயன்படுத்துநர் அணுகு தளச் சிறப்புரிமை மீளாய்வினை நடத்துவதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் பொருத்தமான முறையியல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

**(iv)** பயன்படுத்துநர் அணுகு தளச் சிறப்புரிமை மீளாய்வுகள் தகவல் முறைமைகளிலுள்ள பயன்படுத்துநர் அணுகு தன்மையின் உருவாக்கம், மாற்றியமைத்தல் மற்றும் அழித்துவிடுதல் என்பனவற்றிற்குப் பொறுப்பான பயன்படுத்துநர் அணுகு தளம் முகாமைத்துவத் தொழிற்பாடுகளிலிருந்து சுயாதீனமாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**(v)** பயன்படுத்துநர் அணுகு தளச் சிறப்புரிமை மீளாய்வின் போது அடையாளம் காணப்பட்ட வேறுபாடுகள் தொடர்பில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் அடிப்படைக் காரணங்களை கண்டறியும் பகுப்பாய்வினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

### 5.3 கணனி பாதுகாப்பு மற்றும் பயன்படுத்துநர் நடவடிக்கை பதிவுகளின் முகாமைத்துவம்

5.3.1 வாடிக்கையாளர் தரவுகளை வெளிக்காட்டுகின்ற மிகமுக்கியமான தகவல் முறைமைகள் மற்றும் தகவல் முறைமைகளின் கணனி பாதுகாப்பு மற்றும் பயன்படுத்துநர் நடவடிக்கை பதிவுகளினையும் முகாமைப்படுத்துவதற்கு 5.3.2 இலிருந்து 5.3.7 வரையிலான தேவைப்பாடுகளைப் பின்பற்றுகின்ற கணனி பாதுகாப்பு மற்றும் பயன்படுத்துநர் நடவடிக்கை பதிவுகளின் முகாமைத்துவக் கொள்கையொன்றினை உரிமம்பெற்ற வங்கிகள் நடைமுறைக்கிடல் வேண்டும். அத்தகைய கொள்கையினை பணிப்பாளர் சபையின் தற்றுணிபின் அடிப்படையில் ஏனைய தகவல்முறைமைகளையும் உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கலாம்.

5.3.2 கொள்கையானது பேணப்படவேண்டிய பதிவுகளின் வகைகள், பிடித்துவைத்திருக்கும் காலம், மீளாய்வின் கால இடைவெளி, மீளாய்வு முறை மற்றும் பயன்படுத்துவதற்கான கருவிகள், சம்பவத்தினை அடையாளம் காணுதல் மற்றும் பதிலிறுத்தல் மற்றும் பதிவுகளினைப் பேணுதல் மற்றும் மீளாய்வு செய்வதற்கான பொறுப்பாண்மைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

5.3.3 கணனி பாதுகாப்பு பதிவானது பாதுகாப்பு மென்பொருள், தொழிற்பாட்டு முறைமைகள் மற்றும் பிரயோகங்களினால் உருவாக்கப்பட்ட பதிவுகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

5.3.4 பேணப்படுகின்ற பாதுகாப்பு பதிவானது தகவல் பாதுகாப்பு தொடர்பான எதிர்பாரத நிகழ்வுகளை அடையாளம் காணவும் புலனாய்வு செய்யவும் போதுமானதாக இருத்தல் வேண்டும்.

5.3.5 பேணப்படுகின்ற பயன்படுத்துநர் நடவடிக்கை பதிவு, வாடிக்கையாளர் தரவுகள் மிகமுக்கியமான தகவல் முறைகளை அணுகுவதற்கான அல்லது திருத்தியமைப்பதற்கு மறுப்பு எதுவுமில்லாத பொறுப்புக்கூறும் தன்மை போதுமானதாக இருத்தல் வேண்டும்.

5.3.6 சிறப்புரிமை பெற்ற பயன்படுத்துநர்களின் பதிவுகளுக்கு உயர்ந்த முக்கியத்துவமளிக்கப்பட வேண்டும் என்பதுடன், பொருத்தமான கருவிகள் மற்றும் முறைகளைப் பயன்படுத்தி கிட்டத்தட்ட அதேநேர அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுதலும் வேண்டும்.

5.3.7 கொள்கையானது, சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, மற்றும் தகவல் பாதுகாப்புக் குழு என்பனவற்றின் விதந்துரைப்புக்களின் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெறுதல் வேண்டும்.

5.4 தகவல்களை வகைப்படுத்தல் மற்றும் சுட்டுத்துண்டிடுதல்

5.4.1 இலத்திரனியல் ரீதியாகப் பேணப்பட்ட அனைத்துத் தரவுகளும் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட தகவல் வகைப்படுத்தல் கொள்கைக்கிணங்க தகவல் பாதுகாப்பு உணர்திறன் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க சுட்டுத்துண்டிடப்படுதல் வேண்டும்.

5.4.2 உரிமம்பெற்ற வங்கிகள் 3.1இல் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களுக்கிணங்க, எந்தவொரு சிறிய தரவுகள் தொடர்பிலும் தரவு வகைகளை காத்திரமான விதத்தில் தீர்மானிப்பதற்காக பொருத்தமான பொறிமுறையொன்றினை நிறுவிக்கொள்ளுதல் வேண்டும்.

5.5 தரவு குறிமுறையாக்கம்

5.5.1 வாடிக்கையாளர் தரவு குறிமுறையாக்கம்

**(i)** வாடிக்கையாளர் தரவுகள் 5.5.1(ii) இல் விதந்துரைக்கப்பட்டவாறு குறிமுறையாக்கத்தினைப் பயன்படுத்தி வழமையாக பாதுகாக்கப்படல் வேண்டும். இத்தேவைப்பாடுகள் உரிமம்பெற்ற வங்கிகள், முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்புப் பணி வழங்குவோருடன் பேணப்படும் வாடிக்கையாளர் தரவுகளுக்கு ஏற்புடைத்தாகும் எனினும் குறிமுறையாக்கம் சாத்தியமின்றி அல்லது பொருத்தமுடையதாக இல்லாதபோது 5.5.1(iv) இற்கிணங்க வாடிக்கையாளர் தரவுகளை பாதுகாப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் மாற்று கட்டுப்பாடுகளை பயன்படுத்தலாம்.

**(ii)** விதந்துரைக்கப்பட்ட குறிமுறையாக்கங்களின் மட்டங்கள்

(அ) எஞ்சியுள்ள தரவுக் குறிமுறையாக்கம்

வாடிக்கையாளர் தரவுகள் தரவுத்தள குறிமுறையாக்கத்திற்கு அல்லது கோப்புமட்டத்திலான எஞ்சியுள்ள குறிமுறையாக்கத்திற்கு உட்பட்டனவாகும்.

(ஆ) இடைப்போக்கிலுள்ள தரவு குறிமுறையாக்கம்

இடைப்போக்கிலுள்ள தரவு குறிமுறையாக்கம் வாடிக்கையாளர் தரவுகளுக்காக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். மேலும், அத்தகைய தரவுகளை உள்ளடக்கியுள்ள கோப்பு மாற்றல் செய்யப்படுகின்ற நேரத்தில் இது கோப்பு மட்டத்தில் குறிமுறையாக்கம் செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(இ) முடிவுப் புள்ளிச் சாதனங்கள் மற்றும் அகற்றத்தக்க சாதனங்களுக்கான முழுவட்டு குறிமுறையாக்கம்

மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் மற்றும் முகவர்களின் முடிவுப்புள்ளிச் சாதனங்களை உள்ளடக்கி ஒன்றில் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக உரிமம்பெற்ற வங்கியின் வாடிக்கையாளர் தரவினை சேமிக்கின்ற அத்தகைய சாதனங்கள் மற்றும் அகற்றத்தக்க சாதனங்கள் முழுமையான வட்டு குறிமுறையாக்கத்திற்கு உட்பட்டனவாகும். உரிமம்பெற்ற வங்கிகள், பொதுவாக அசையாத மற்றும் தரவுக் கசிவு இடர்நேர்வுகள் மிகச் சொற்பமாகவுள்ள ஏதேனும் முடிவுப் புள்ளிச் சாதனங்களை, உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஏதேனுமொரு விலக்கல் பிரமாணத்தினை அடிப்படையில் அதன் தேவைப்பாடுகளிலிருந்து நீக்கிக்கொள்ள முடியும்.

**(iii) பயன்படுத்தப்படவுள்ள குறிமுறையாக்கத்தின் வகைகள்**

உரிமம்பெற்ற வங்கிகள் தொழில்முறை நியமித்திலான குறிமுறையாக்க முறைகளை பயன்படுத்துதல் வேண்டும். அத்தகைய முறைகளை தெரிவுசெய்வது, சபை ஒங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்புக் குழு என்பனவற்றின் விதந்துரைப்பின் மீது உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்குட்பட்டதாகும்.

**(iv) வாடிக்கையாளர் தரவு குறிமுறையாக்க தேவைப்பாடுகளிலிருந்து விலக்கல்கள்**

(அ) குறிப்பிட்ட சூழ்நிலையொன்றில் குறிமுறையாக்கத்தினைப் பயன்படுத்தி வாடிக்கையாளர் தரவினை பாதுகாப்பது சாத்தியமற்றதாக அல்லது பொருத்தமற்றதாக இருக்கும்போது, வங்கியின் பணிப்பாளர் சபையின் தற்றுணிவின்படி குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்காக 5.5.1(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் தரவு குறிமுறையாக்கத்திலிருந்து உரிமம்பெற்ற வங்கிகள் விலகிக்கொள்ள தீர்மானிக்கமுடியும்.

(ஆ) 5.5.1(iv)(அ) இல் உள்ளவாறு விலகல்களுக்கு ஒப்புதலளிக்கப்படும் வேளையில் வாடிக்கையாளர் தரவு குறிமுறையாக்கம் செய்யப்பட்டமையின் காரணமாக தோன்றுகின்ற இடர்நேர்வுகளைக் குறைப்பதற்காக போதுமான ஈடுசெய்யும் கட்டுப்பாடுகளும் கண்காணிப்பு வழிமுறைகளும் நடைமுறைக்கிடப்பட்டுள்ளமையினை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(இ) ஈடுசெய்கின்ற கட்டுப்பாடுகளுடன் சேர்த்து பிரிவு 5.5.1(iv)(அ) இல் உள்ளவாறான அனைத்து விலகல்களும் பணிப்பளார் சபையின் ஒப்புதலுக்காக சபை ஒழுங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவினூடாக தகவல் பாதுகாப்புக் குழுவினால் விதந்துரைக்கப்படல் வேண்டும்.

(ஈ) 5.5.1(iv) அ இன்படி ஒப்புதலளிக்கப்பட்ட அனைத்து விலக்கல்களும் இணைக்கப்பட்ட ஈடுசெய்கின்ற கட்டுப்பாடுகள் மற்றும் கண்காணிப்பு வழிமுறைகளுடன் சேர்த்து, ஒன்றில், தரவுகள் இப்பொழுது குறிமுறையாக்கத்துடன் பாதுகாக்கப்படுகின்றதா அல்லது சிறந்த முறையில் கட்டுப்பாடுகள் ஈடுசெய்யப்படுகின்றனவா என்பதனை தீர்மானிப்பதற்காக ஒவ்வொரு இரண்டாண்டுகளுக்குகொருதடவையாவது மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் கண்காணிப்பு பொறிமுறையினையும் அறிமுகப்படுத்தமுடியும்.

**5.5.2 இரகசியமான வாடிக்கையாளர் அல்லா தரவு குறிமுறையாக்கம்**

5.5.1 இல் குறித்துரைக்கப்பட்ட வாடிக்கையாளர் தரவுகளுக்கான குறிமுறையாக்கத் தேவைப்பாடுகள், தரவுக் கசிவு அல்லது உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான குறிமுறையாக்கத்தினைத் தடுக்கக்கூடிய வேறேதேனும் மோசமான தகவல் பாதுகாப்பு சம்பவங்களுக்கு உட்பட்டிருக்குமாயின், உரிமம்பெற்ற வங்கிக்கு மிகச் சொற்பமான மோசமான தாக்கத்தினை மட்டுமே ஏற்படுத்தக்கூடிய இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத தரவு முறைமைகள் தவிர, இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத தரவுகளுக்கும் பிரயோகித்தல் வேண்டும்.

## 5.6 பாதுகாப்பு தொழிற்பாடுகள் நிலையம்

### 5.6.1 ஏற்புடைத்தன்மை

உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளாக விளங்கும் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் மற்றும் தன்னியக்கக் கூற்றுப்பொறி எந்திரங்கள் தவிர்ந்த இலத்திரனியல் விநியோக மார்க்கங்களை வழங்குகின்ற உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் (உதாரணமாக இணையத்தள வங்கித்தொழில், செல்லிடத்தொலைபேசி செயலி, வாடிக்கையாளர்/ மூன்றாம் தரப்பு ஒருங்கிணைப்புக்கள் போன்றவை) ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிலுள்ள தேவைப்பாடுகளின்படி, பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தினை நடைமுறைப்படுத்தல் வேண்டும். 5.6.7(iii) இல் உள்ளவாறான தரவு இழப்பு தடுப்புக் கருவியினை நடைமுறைப்படுத்துவது அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் கட்டாயமானதாகும்.

### 5.6.2 பொறுப்புக்கள்

பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் கண்டுபிடித்தல், சம்பவங்களுக்கான பதிலிறுப்பு, தடயவியல், எதிர்பாராத சம்பவங்களை அறிக்கையிடல், நாளாந்த தகவல் பாதுகாப்பு அச்சுறுத்தல் மற்றும் சம்பவங்கள் தொடர்பான அறிவனைப் பகிர்ந்துகொள்ளுதல் என்பனவற்றிற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

### 5.6.3 அறிக்கையிடல் வழிமுறை

உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபை, பாதுகாப்பு தொழிற்பாடுகள் நிலையத்திற்காக பொருத்தமான அறிக்கையிடல் வழியொன்றினை நிறுவிக்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய அறிக்கையிடுகின்ற வழி வங்கியின் முதன்மை தகவல் அலுவலர்/ தகவல் தொழில்நுட்பவியல் தலைவர் இருவரையும் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் பாதுகாப்புத் தொழிற்பாடுகள் நிலையம் அவர்களது பொறுப்புக்களை காத்திரமான முறையில் மேற்கொள்வதற்காக தொழிற்பாடுகள் தொடர்பில் போதுமான மேற்பார்வைகளைக் கொண்டிருக்கின்ற வேளையில், பாதுகாப்பு தொழிற்பாடுகள் நிலையத்தின் தொழிற்பாடுகளுக்கு யார் முக்கிய பொறுப்புக்கு உரியவர் பற்றியும் தெளிவாக குறித்துரைக்கிறது.

### 5.6.4 தொழிற்பாட்டு நேரம்

பாதுகாப்புத் தொழிற்பாடுகள் நிலையம் 24X7 என்ற அடிப்படையில் தொழிற்படுதல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகளினது நடவடிக்கையின் மட்டங்கள் மற்றும் அச்சுறுத்தல் தோற்றப்பாடு என்பனவற்றின் அடிப்படையில் நாள்/ வாரம் என்பனவற்றின் வேறுபட்ட நேரங்களுக்கேற்ப அலுவலர்களின் அளவினைத் தீர்மானித்துக்கொள்ளுதல் வேண்டும்.

### 5.6.5 மனித வளங்கள், எந்திரங்கள் விசேடமாக கணனிகள் மூலம் மனித நுண்ணறிவினை உருவாக்குகின்ற செய்முறைகள் மற்றும் தன்னியக்கப்படுத்தல்

(i) பாதுகாப்புத் தொழிற்பாடுகள் நிலையத்திலுள்ள அலுவலர்களின் வகிபாகங்கள் குறைந்தபட்சம் பாதுகாப்புப் பகுப்பாய்வுகள் (அடுக்கு 1) நிகழ்வுகளுக்குப் பதிலிறுப்போர் (அடுக்கு 2) பாதுகாப்பு வல்லுனர்கள்/ அச்சுறுத்தலை தேடி அழிப்போர் (அடுக்கு 3) மற்றும் பாதுகாப்புத் தொழிற்பாடுகள் நிலையத்தின் முகாமையாளர் ஆகியோரை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(ii) உரிமம்பெற்ற வங்கிகள் ஒவ்வொரு மட்டத்திலும் தேவையான அலுவலர் மட்டங்களையும் பாதுகாப்பு தொழிற்பாடு நிலையத்தில் தேவைப்படும் அலுவலர்கள் வேறுஏதேனும் வகைகளையும் விவேகமான முறையில் தீர்மானித்தல் வேண்டும்.

(iii) பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலைய முகாமையாளரின் வகிபாகம் தவிர, மேலேயுள்ள ஏதேனும் வகிபாகத்திற்காக மனித வளங்கள் பயன்படுத்துவதற்குப் பதிலாக கணனி தொடர்பான கோட்பாடு மற்றும் அபிவிருத்தி முறைகள் அல்லது வேறு தன்னியக்க தொழில்நுட்பவியல்களை பயன்படுத்தலாம்.

5.6.6 செய்முறைகள்

**(i) தெளிவாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட செய்முறைகள்**

பாதுகாப்புத் தொழிற்பாடுகள் நிலையம் நிகழ்வுகளின் வகைப்படுத்தல் மற்றும் முன்னுரிமைப்படுத்தல், பகுப்பாய்வு, மீட்பு நடவடிக்கை மற்றும் அறவிடல், நிகழ்வுக்குப் பின்னரான மதிப்பீடு, தடயவியல் என்பன தொடர்பில் தெளிவாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட செய்முறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய செய்முறைகள் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கையினையும் ஒவ்வொரு நடவடிக்கைக்குமான பொறுப்பான மக்களையும் தெளிவாக அடையாளம் காணுதல் வேண்டும்.

**(ii) வரைவிலக்கணம் செய்யப்பட்ட அடிப்படை நடவடிக்கை மட்டம்**

பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையம், காத்திரமான கண்காணிப்பு மற்றும் சந்தேகத்திற்குரிய மற்றும் வழமைக்குமாறான நடவடிக்கைகளை கண்டுபிடிப்பதனை இயலுமைப்படுத்துவதற்கான பயன்படுத்துநர்கள் பிரயோகங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்புக் கூறுகளுக்காக வரைவிலக்கணம் செய்யப்பட்ட மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட அடிப்படை நடவடிக்கை மட்டங்களை கொண்டிருத்தல் வேண்டும். அடிப்படை நடவடிக்கை மட்டத்தினை, வழமையான நடவடிக்கையிலிருந்து சந்தேகத்திற்குரிய நடவடிக்கையினை காத்திரமான முறையில் பிரித்தறிவதற்கு பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தினால் பயன்படுத்தமுடியும்.

5.6.7 கருவிகள்

**(i) கண்காணிப்பு மற்றும் கண்டுபிடித்தல் கருவிகள்**

உரிமம்பெற்ற வங்கியின் தொழில்நுட்பவியல் பயன்பாட்டின் அளவு மற்றம் சிக்கல் வாய்ந்ததன்மை என்பனவற்றிற்கு ஈடுகொடுக்கும் விதத்தில் பாதுகாப்புத் தொழிற்பாடுகள் நிலையம் கண்காணிப்பு மற்றும் துப்பறியும் கருவிகளை கொண்டிருத்தல் வேண்டும். குறைந்தபட்சம் பாதுகாப்புத் தொழிற்பாடுகள் நிலையம் தன்னியக்கப்படுத்தப்பட்ட சொத்து கண்டறிதல், தரவுத்தள நடவடிக்கைக் கண்காணிப்பு, பாதிக்கப்படும் தன்மையின் மதிப்பீடு மற்றும் அத்துமீறிய சம்பவங்களை துப்பறிதல் என்பனவற்றிற்கான கருவிகளையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

**(ii) பாதுகாப்பு தகவல் மற்றும் நிகழ்வு முகாமைத்துவக் கருவிகள்**

உரிமம்பெற்ற வங்கிகள் பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தின் குறிப்புக்களைத் திரட்டுதல், நிகழ்வுகளை பரஸ்பரம் தொடர்புபடுத்துதல், நிகழ்வுகளை முகாமைப்படுத்தல், தடயவியல் பகுப்பாய்வு மற்றும் முகாமைத்துவ அறிக்கையிடல் என்பனவற்றினை இயலாற்றலுடைய தாங்குவதற்காக அதற்கு தொழில்துறை தரத்திலான பாதுகாப்பு தகவல் மற்றும் நிகழ்வு முகாமைத்துவக் கருவிகளையும் ஆதரவு முறைமைகளையும் வழங்குதல் வேண்டும்.

**(iii) தரவுகள் இழக்கப்படுவதனை தடுக்கும் கருவிகள்**

(அ) உரிமம்பெற்ற வங்கிகள் தரவுகள் கசிவதனால் ஏற்படும் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்காக தொழில்துறைத் தரத்திலான தரவு இழப்புக்களைத் தடுக்கும் கருவியை நடைமுறைப்படுத்தல் வேண்டும். நடைமுறைப்படுத்தும் செயற்பரப்பானது முழு வங்கியையும் வாடிக்கையாளர் தரவினை வெளிப்படுத்தும் ஏதேனும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் மற்றும் முகவர்கள் ஆகியோரை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(ஆ) மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் மற்றும் முகவர்களைப் பொறுத்தவரையில் உரிமம்பெற்ற வங்கிகள் அவ்வங்கிகளினால் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைப்பாடுகளுக்கேற்ப தரவு இழப்பினைத் தடுக்கும் கருவிகளை நடைமுறைப்படுத்த அவர்களை அனுமதிக்கலாம். தரவு இழப்புக்களைத் தடுப்பதற்குப் போதுமான வழிமுறைகள் நடைமுறையில் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் மற்றும் முகவர்களின் அத்தகைய நடைமுறைப்படுத்தல்களை குறைந்தபட்சம் ஆண்டிற்கு ஒரு தடவையாவது மீளாய்வு செய்தல் வேண்டும்.

(இ) மூன்றாம் தரப்பு பணி வழங்குவோருடன் தரவுகளை பகிர்ந்துகொள்ளும்போது கட்டுப்பாட்டு வழிமுறைகள் நடைமுறையில் இருப்பதன் காரணமாக தரவுக் கசிவினால் ஏற்படக்கூடிய இடர்நேர்வுகள் இல்லாதிருக்குமாயின் உரிமம்பெற்ற வங்கிகள் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோருக்கு தரவு இழப்புக்களை தடைசெய்யும் கருவிகளை நடைமுறைப்படுத்துவதிலிருந்தும் விலக்களிக்கலாம். அத்தகைய விலக்களிப்புக்களுக்கு தொடர்பான வியாபார/ தொழிற்பாட்டு செயற்பாடுகளின் தலைவர், முதன்மைத் தகவல் அலுவலர்/ தலைவர் தகவல் தொழில்நுட்பவியல், முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத் தலைவர் ஆகியோரினால் வழங்கப்பட்ட சுயாதீனமான மதிப்பீடுகளின் அடிப்படையில் உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்படல் வேண்டும். அத்தகைய அனைத்து விலக்கல்களும் குறைந்தபட்சம் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்குமொருமுறையாவது மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

### 5.6.8 அச்சுறுத்தல் தகவல்கள் மற்றும் புலனாய்வுகள்

உரிமம்பெற்ற வங்கிகள் தொடர்பான மூலங்களிலிருந்து அச்சுறுத்தல் தகவல்களையும் அச்சுறுத்தல் புலனாய்வுகளையும் பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும். பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தின் அலுவலர்கள், செய்முறைகள் மற்றும் கருவிகள் பெறப்பட்ட அச்சுறுத்தல் தகவல்கள் மற்றும் அச்சுறுத்தல் புலனாய்வுகளை ஒன்று சேர்த்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் தொழில்முறைப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு இயலாற்றல் உடையனவாக இருத்தல் வேண்டும்.

### 5.6.9 பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தினை வெளியாட்களுக்கு ஒப்படைத்தல்

**(i)** உரிமம்பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளர் சபை, பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தின் ஏதேனும் தொழிற்பாடுகளை மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரிடம் ஒப்படைப்பதற்கு தீர்மானிக்க முடியும்.

**(ii)** பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தின் தொழிற்பாடுகளை வெளியாருக்கு வழங்குவது தொடர்பான அனைத்துத் தீர்மானங்களும் ஏதேனும் வேறு சாதனங்கள் அல்லது உரிமம்பெற்ற வங்கிகளுக்கு பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தின் பணி வழங்குவோரினால் வழங்கப்பட்ட பணிகளின் காரணமாக ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள்/ பாதிக்கப்படும் தன்மைகள் உட்பட, அத்தகைய வெளியிலிருந்து பெறப்படும் பணியினால் ஏற்படும் தகவல் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை பணிப்பாளர் சபை மதிப்பிட்டதன் பின்னர் மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்தகைய மதிப்பீடுகள், தகவல்கள், முதன்மை தகவல் அலுவலர்/ தகவல் தொழில்நுட்பவியல் தலைவர், முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர், சட்டத்துறை தலைவர் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத் தலைவர் ஆகியோரினால் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட சுயாதீனமான மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

**(iii)** பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தின் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் எவரோ அவர்கள் வங்கியின் பொதுத்தரவு அல்லாத தரவுகளை ஐ.எஸ்.ஓ 27001 - தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையின் பிந்திய பதிப்பிற்காக வெளிப்படுத்துவதற்கு தத்துவம் பெற்ற சான்றளிக்கும் சபையிடமிருந்து பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தின் பணிகளை உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்குவதனை உரிமம்பெற்ற வங்கிகள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**(iv)** வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிப்படுத்தப்படாத உடன்படிக்கையொன்றினை பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தின் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோருடன் உரிமம்பெற்ற வங்கி கொண்டிருக்கலாம்.

**(v)** பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தின் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் ஒதுக்கப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் வங்கியின் பொதுத் தரவுகள் அல்லாதவற்றை வெளிப்படுத்தலாம் என்பதுடன் இது வங்கியின் அல்லது வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க சிறப்பியல்பு வாய்ந்த பின்னணி பரீட்சிப்புப் பணிகளினூடாக பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தின் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் மேற்கொள்ளப்படும் அதிகரித்த பின்னணிப் பரீட்சிப்புக்களுக்குட்பட்டதாகும்.

**(vi)** உரிமம்பெற்ற வங்கியின் உள்ளக பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையமாக இருக்குமிடத்து மூன்றாம் தரப்பு பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையங்களையும் அவற்றின் அலுவலர்களையும் பரீட்சிக்கின்ற இலங்கை மத்திய வங்கியின் உரிமைகள், உரிமம்பெற்ற வங்கிக்கும் பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தின் பணி வழங்குவோருக்குமிடையிலான ஒப்பந்த ரீதியான உடன்படிக்கைகளினூடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**(vii)** இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள ஏதேனும் பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தின் பணி வழங்குவோரினால் உரிமம்பெற்ற வங்கிக்கு வழங்கப்பட்ட பணிகள் தொடர்பிலான ஏதேனும் தகவல்களை அல்லது தரவுகளை கோருவதற்கும் பெற்றுக்கொள்வதற்குமான இலங்கை நியாயதிக்கத்தின் உரிமைகள் உரிமம்பெற்ற வங்கிக்கும் பாதுகாப்புத் தொழிற்பாடுகள் நிலையத்தின் பணி வழங்குவோருக்குமிடையிலான ஒப்பந்த ரீதியான உடன்படிக்கையினூடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**(viii)** உரிமம்பெற்ற வங்கிக்கும் வெளியிலிருந்து பணிகளை வழங்கும் பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்திற்குமிடையில் இணைப்பினை ஏற்படுத்துவதற்காக போதுமான மூப்பும் அதிகாரமும் கொண்ட பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலைய அலுவலரொருவரை இணைப்பாளராக நியமித்தல் வேண்டும்.

**5.6.10 பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையமானது முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் தொழிற்படுத்தப்படும் தகவல் முறைகளுக்கு வசதிகளை வழங்குகிறது.**

உரிமம்பெற்ற வங்கிகள் முகவர்களினால் அல்லது மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் தொழிற்படுத்தப்படுகின்ற ஏதேனும் மிகமுக்கியமான தகவல் முறைமைகள் மேலேயுள்ள தேவைப்பாடுகளுக்கிணங்க பாதுகாப்புத் தொழிற்பாடுகள் நிலையத்தினால் பாதுகாக்கப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். அத்தகைய சூழ்நிலைகளில் உரிமம்பெற்ற வங்கிகள் தொடர்பான முகவர்களை அல்லது மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரை அவர்களது சொந்த பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தினை அல்லது 5.6.9 இல் குறித்துரைக்கப்பட்ட ஏற்புடைத்தான தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்கின்ற மூன்றாம் தரப்பு பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையங்களுக்கு சந்தாக்களைச் செலுத்துமாறு தெரிவித்துக்கொள்ளுதல் வேண்டும் அல்லது ஏற்புடைத்தானவாறு வங்கியின் பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தினால் வசதிகள் வழங்கப்படும். மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் முகவர்களினாலும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினாலும் தொழிற்படுத்தப்படுகின்ற அனைத்து முக்கியமல்லாத தகவல் முறைமைகளுக்கான பாதுகாப்புத் தொழிற்பாடுகள் நிலையத்தின் வசதிகளுக்கான அவசியத்தினை உள்ளக இடர்நேர்வு மதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானித்தல் வேண்டும்.

## 5.7 தகவல் பாதுகாப்பு நிகழ்வுப் பதிலிறுப்பு மற்றும் மீட்சி

### 5.7.1 நிகழ்வு பதிலிறுப்புத் திட்டம்

நிகழ்வுகள் அதிகரிக்கும் தன்மை, நிவர்த்தி, மீட்பு மற்றும் உள்ளக மற்றும் வெளிவாரி ஆர்வலர்களுடனான தொடர்புகள் போன்றவற்றிற்கான நடவடிக்கை முறைகளை விபரமாகக் குறிப்பிடுகின்ற, இற்றைப்படுத்தப்பட்ட பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட நிகழ்வு பதிலிறுப்புத் திட்டமொன்றினை உரிமம்பெற்ற வங்கிகள் கொண்டிருத்தல் வேண்டும். நிகழ்வு பதிலிறுப்புத் திட்டமானது சைபர் பாதுகாப்பு நிகழ்வுகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாத மற்றையவற்றையும் உள்ளடக்குகின்ற பொதுவாக அறிந்த தகவல் பாதுகாப்பு நிகழ்வுகளின் வகைகளை கையாளுகின்ற விதத்தில் குறிப்பிட்ட நடைமுறைகளையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

### 5.7.2 நிகழ்வுப் பதிலிறுப்பு மற்றும் மீட்பு பரீட்சிப்பு

நிகழ்வுப் பதிலிறுப்பு மற்றும் மீட்பு இயலாற்றல்களை, உரிமம்பெற்ற வங்கியின் நிகழ்வுப் பதிலிறுப்பு ஆயத்த நிலையினைத் தீர்மானிப்பதற்காக யதார்த்தமான அதேபோன்று கூடியளவிற்கு சாத்தியமானளவிற்கு நெருக்கமான சூழ்நிலைகளைப் பயன்படுத்தி குறைந்தபட்சம் ஆண்டிற்கொருதடவையாவது பரீட்சித்துக் கொள்ளுதல் வேண்டும். பரீட்சிப்பின் பெறுபேறுகள் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவினூடாக தகவல் பாதுகாப்புக் குழுவினால் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

## 5.8 தகவல் பாதுகாப்பு பரீட்சிப்பு

### 5.8.1 நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்புப் பரீட்சிப்புக்கள்

**(i)** செயற்பரப்பு

(அ) வாடிக்கையாளர் தரவுகளை வெளிப்படுத்துகின்ற மிகமுக்கியமான தகவல் முறைமைகளும் தகவல் முறைமைகளும் நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்பு பரீட்சிப்புக்களுக்கு உட்பட்டனவாகும். வாடிக்கையாளர் பாதிக்கப்படக்கூடிய விதத்தில் தரவுகளை வெளிப்படுத்தக்கூடிய மிகமுக்கியமான தகவல் முறைமைகள் அல்லது ஏதேனும் தகவல் முறைகளுக்கு ஏதேனும் வெளிப்படுத்தல்களை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் மற்றைய தகவல் முறைமைகளும் நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்பு பரீட்சிப்புக்களுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) பணிப்பாளர் சபை, இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத தரவுகளை வெளிப்படுத்துகின்ற நெருக்கடியல்லா தகவல் முறைமைகளுக்காக நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்பு பரீட்சிப்பினை மேற்கொள்வதற்கான தேவைபற்றி, ஒவ்வொரு அத்தகைய தகவல் முறைமையினதும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்புக் குழு என்பனவற்றின் ஆலோசனையுடன் தீர்மானத்தினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(இ) நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்பு பரீட்சிப்புக்களை ஆரம்ப நடைமுறைப்படுத்தலுக்கு முன்னதாகவும் திருத்தியமைத்தல்களின் நடைமுறைப்படுத்தல்களுக்கு முன்னராகவும் மேற்கொள்ளுதல் வேண்டும். சிறிய திருத்தியமைத்தல்கள், நீக்கப்படவேண்டியவற்றை குறிப்பிட்ட சிறிய திருத்தங்களை நடைமுறைப்படுத்தும் நேரத்தில் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட விலக்கல் கொள்கை மற்றும் தகவல் பாதுகாப்புக் குழுவின் ஒப்புதல் என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்பு பரீட்சிப்புக்களிலிருந்து விலக்களிக்க முடியும்.

**(ii)** நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான பரீட்சிப்புக்களின் பின்வரும் வகைகளை குறிப்பிட்ட நடைமுறைப்படுத்தல்களுக்கு பிரயோகிக்கத்தக்க விதத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(அ) நிலையான பிரயோகப் பாதுகாப்புப் பரீட்சிப்புக்கள் அல்லது ஏதேனும் தீய நோக்கினை அல்லது பாதுகாப்பற்ற குறியீட்டினைக் கண்டறிவதற்கான மூல குறியீட்டு மீளாய்வு;

(ஆ) பிரயோக மட்டத்தில் பாதிக்கப்படக்கூடிய தன்மையினையும் தாக்குதலை மேற்கொள்பவர் பயன்படுத்தக்கூடியவற்றையும் கண்டறிவதற்கான இயக்கவாற்றல் வாய்ந்த பிரயோகப் பாதுகாப்பு பரீட்சிப்பு

(இ) உள்ளக கடுமையான கொள்கைகளுடன் இணங்கிச்செல்வதனை உறுதிப்படுத்துவதற்காக கணித்தல் மற்றும் வலையமைப்பு உட்கட்டமைப்பினை கடினப்படுத்துவது தொடர்பில் தர உத்தரவாத பரீட்சிப்பு; அத்துடன்

(ஈ) கணித்தல் மற்றும் வலையமைப்பு உட்கட்டமைப்பில் காணப்படும் பாதிக்கப்படக்கூடியதன்மைகளை அடையாளம் காண்பதற்கான உட்கட்டமைப்பின் பாதிக்கப்படும் தன்மையினை மதிப்பீடு செய்தல்.

**(iii)** நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான பரீட்சிப்புக்கள், தகவல் முறைமையின் அபிவிருத்திக்கு அத்துடன்/ அல்லது நடைமுறைப்படுத்தலுக்குப் பொறுப்பான குழுவின் சுயாதீனமான குழுவினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள், முகவர்கள் அல்லது மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் தொழிற்படுத்தப்படும் தகவல் முறைமைகளின் தகைமையினை உறுதிப்படுத்துவது, முகவரின்/ மூன்றாம் தரப்பினரின் பொருத்தமான உள்ளகக் குழுவினால் அல்லது உரிமம்பெற்ற வங்கிகளினால் ஏற்றுக்கொள்ளத்தக்க வெளிவாரி பணி வழங்குவோரினால் மேற்கொள்ளப்படுகின்ற நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான பரீட்சிப்புக்கு உட்பட்டதாகும்.

**(iv)** உரிமம்பெற்ற வங்கிகள், தம்மிடமில்லாத மென்பொருட்களை கொள்வனவு செய்யும் போது 5.8.1(ii) இல் உள்ளவாறு நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான பரீட்சிப்புக்களை நடத்துவதற்கு சாத்தியமில்லையாயின், பொருத்தமான மாற்று பாதுகாப்பு மதிப்பீட்டு முறைகளை பின்பற்றலாம்.

**(v)** வெளிவாரி விற்பனையாளர்களினால் வழங்கப்படும் தகவல் முறைமையினைப் பொறுத்தவரை 5.8.1(ii)(அ) இற்கான மாற்று ஏற்பாடொன்றாக, உரிமம்பெற்ற வங்கி அவ்வங்கியினாலும் மற்றும் தகவல் முறைமை வழங்குவோர் ஆகிய இருவரினாலும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளத்தக்க சுயாதீனமாக ஒருவரினால் வழங்கப்படும் உத்தரவாதமொன்றில் தங்கியிருக்கலாம்.

**(vi)** தொடர்பான நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான பரீட்சிப்புக்கள் முடிவடைந்ததன் பின்னர் உற்பத்திச் சூழலை நோக்கி மூலவளங்கள் குறியீடு நகரும் பொழுது வேண்டுமென்றே தீங்கிழைக்கும் குறியீடு உள்ளடக்கப்படாதமையினை உறுதிப்படுத்துவதற்காக உரிமம்பெற்ற வங்கிகள் தொழில்துறை நியமக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

**5.8.2 பாதிக்கப்படும் தன்மையின் மதிப்பீடுகள்**

**(i)** வாடிக்கையாளர் தரவுகளை எடுத்துக்காட்டும் மிகமுக்கியமான தகவல் முறைமைகள் மற்றும் தகவல் முறைமைகள் என்பன குறைந்தபட்சம் காலாண்டிற்கொருதடவையாவது பாதிக்கப்படும் தன்மை பற்றிய மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

**(ii)** பாதிக்கப்படும் தன்மை மதிப்பீடுகள், உட்கட்டமைப்பு தொடர்பான பாதிக்கப்படும் தன்மை மற்றும் பிரயோகம் தொடர்பான பாதிக்கப்படும் தன்மை ஆகிய இரண்டின் மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**(iii)** பாதிக்கப்படும் தன்மை பற்றிய மதிப்பீடுகள் உற்பத்தி சூழ்நிலைகளின் மீது மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

**(iv)** பாதிக்கப்படும் தன்மை பற்றிய மதிப்பீடுகள் உரிமம்பெற்ற வங்கியின் உள்ளகத் தகவல் பாதுகாப்பு அலுவலரினால் அல்லது வெளிவாரி நிபுணர்களினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(v) அடையாளம் காணப்பட்ட பாதிக்கப்படும் தன்மை தகவல் பாதுகாப்புக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட காலவரையறைக்குள் நிவர்த்தி செய்யப்படல் வேண்டும்.

### 5.8.3 சுயாதீனமான வெளிவாரி நிபுணர்களின் ஊடுருவல் பரீட்சிப்புக்கள்

**(i) குறிக்கோள்**

உரிமம்பெற்ற வங்கிகள் பரீட்சிக்கப்பட்ட தகவல் முறைமை யதார்த்த பூர்வமான உலகியல் முறையிலான தாக்குதல்களை எதிர்த்துநிற்கக்கூடிய பரீட்சிக்கக்கூடிய தகவல் முறைமைகளின் இயலாற்றல்; பரீட்சிக்கப்பட்ட தகவல் முறைமைகளுடன் வெற்றிகரமாக இணக்கம் செய்யும் விதத்தில் அறிவும் அனுபவமும் வாய்ந்ததும் விடாப்பிடியானதுமான ஆற்றல் தொடர்பில் தேவையான மட்டங்களை தாக்குதலாளர் கொண்டிருக்கின்றமை; வங்கியின் தகவல் பாதுகாப்பு இயலாற்றல், தொழிற்பாடு மற்றும் அத்தகைய தாக்குதலைக் கண்டறியக்கூடிய மற்றும் பொருத்தமான விதத்தில் பதிலளிக்கக்கூடிய வங்கியின் தகவல் பாதுகாப்பு, தொழிற்பாடு மற்றும் தலைமைத்துவக் குழு என்பன வங்கியின் இயலாற்றல்; மற்றும் எதிர்காலத்தில் அத்தகைய அச்சுறுத்தல்களைத் தணிப்பதற்குத் தேவையான ஏதேனும் அதிகரிப்புக்கள் என்பனவற்றை தீர்மானிப்பதற்காக சுயாதீனமான வெளிநாட்டு நிபுணர்களின் மூலம் பரீட்சிப்புக்களை நடத்துதல் வேண்டும்.

**(ii) செயற்பரப்பு மற்றும் கால இடைவெளி**

(அ) வாடிக்கையாளர் தரவுகளை வெளிப்படுத்தும் மிகமுக்கியமான தகவல் முறைமைகள், தகவல் முறைமைகள், உரிமம்பெற்ற வங்கிகள் முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோருடனான வாடிக்கையாளர் தரவுக் களஞ்சியம் என்பன சுயாதீனமான வெளிவாரி ஊடுருவல் பரீட்சிப்பு நிபுணர்களின் ஊடுருவல் பரீட்சிப்புக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) மிகமுக்கியமான தகவல் முறைமைகள் குறைந்தபட்சம் ஆண்டிற்கொருதடவையாவது ஊடுருவல் பரீட்சிப்பிற்கு உட்பட வேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்ற வேளையில் மற்றைய அனைத்துத் தகைமைபெற்ற தகவல் முறைமைகளும் 5.8.3(ii)(அ) இல் உள்ளவாறான வாடிக்கையாளர் தரவு களஞ்சியங்களும் குறைந்தபட்சம் இரண்டாண்டிற்கொருமுறையாவது ஊடுருவல் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

(இ) உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபை வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட ஊடுருவல் பரீட்சிப்புக்களின் செயற்பரப்பினை உள்ளடக்கிக் கொள்வதற்குப் பதிலாக இத்தேவைப்பாடுகள் மற்றும் வங்கிக்கான அறிக்கைக்கிணங்க ஏற்புடைத்தான தகவல் முறைமைகள் மற்றும் வாடிக்கையாளர் தரவுகளுக்கான ஊடுருவல் பரீட்சிப்புக்களை நடத்துவதற்கு தகைமைபெற்ற முகவர்களையும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரையும் கேட்டுக்கொள்ளலாம். பணிப்பாளர் சபை தொடர்பான முகவர் அல்லது முன்றாந்தரப்பு பணி வழங்குவோர் இக்கட்டமைப்பில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கிணங்க ஊடுருவல் பரீட்சிப்புக்களை நடத்துவதற்கான இயலாற்றலைக் கொண்டிருக்கின்றனர் என்பதனைத் தீர்மானித்ததன் பின்னரும் பெறப்பட்ட ஊடுருவல் பரீட்சிப்பின் குறிக்கோளை உறுதிப்படுத்துவதற்குப் போதுமான மேற்பார்வை கிடைப்பதனையும் உறுதிப்படுத்திய பின்னரும் மாத்திரமே அத்தகைய கோரிக்கையினை விடுத்தல் வேண்டும்.

(ஈ) ஊடுருவல் பரீட்சிப்புக்கள், உண்மையான முறைமைகள் மற்றும் தரவுப் பயன்பாட்டுக் கருவிகள் தொடர்பில் போலியான யதார்த்த உலக தாக்குதல்களுக்கான நடவடிக்கைகளையும் அதே தகவல் முறைமைக்குள் அல்லது பல் தகவல் முறைமை முழுவதற்குமாக, பரீட்சிக்கப்பட்ட தகவல் முறைமைகளுடன் இணக்கம் செய்து கொள்வதற்காக, உண்மையான தாக்குதல் நடத்துவோரைப் பயன்படுத்துவதையொத்த நுணுக்கங்களையும் ஒன்றில் தனியாக அல்லது மற்றைய பாதிக்கும் தன்மைகளுடன் சேர்த்து வெற்றிகரமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு பாதிக்கப்படும் தன்மையினை அடையாளம் காணமுடியும்.

(உ) நேரடி/ உற்பத்தி முறைமைகளின் மீதான ஊடுருவல் பரீட்சிப்புக்களை 5.8.3(ii)(ஊ) மற்றும் 5.8.3(viii)(இ) என்பனவற்றிற்குட்பட்டு, வழமையான வியாபார நிலைமைகளின் கீழ் நடத்துதல் வேண்டும்.

(ஊ) 10ஆம் பிரிவின் இடைக்கால ஏற்பாடுகளின் கீழ், குறித்துரைக்கப்பட்ட கால அவகாசத்திற்குட்பட்டு, உரிமம்பெற்ற வங்கிகள் உற்பத்தி முறைமைகள் மீது ஊடுருவல் பரீட்சிப்புக்களை நடத்துவதற்கு போதுமான முதிர்ச்சியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு உற்பத்தியல்லா முறைமைகள் மீது ஆரம்பத்தில் ஊடுருவல் பரீட்சிப்புக்களை நடத்தலாம். ஊடுருவல் பரீட்சிப்பினை மேற்கொள்வது தொடர்பான மற்றைய அனைத்து தேவைப்பாடுகளும் விலகல்கள் அனுமதிக்கப்படும் போது அல்லது அவசியமாக இருக்கும்போது தவிர, அத்தகைய உற்பத்தியல்லா முறைமைகளின் மீது ஊடுருவல் பரீட்சிப்புக்கள் நடத்தப்படும் போதுகூட பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.

(எ) பரீட்சிக்கப்பட்ட நுழைவு தகவல் முறைமைகளுக்கு அல்லது தரவுகளுக்கு தாக்குதல் நடத்துமொருவரினால் தேவைப்படுத்தப்பட்ட நவீனத்துவம் மற்றும் வாடிக்கையாளர் தன்மையின் உண்மையான மட்டங்களைத் தீர்மானிக்கும் பொருட்டு, வழமையாக நடைமுறைப்படுத்தப்படும் தகவல் பாதுகாப்பு வழிமுறைகளில் எந்தவொரு மாற்றத்தினையும் செய்யாமல் ஊடுருவல் பரீட்சிப்புக்களை நடத்துதல் வேண்டும். எனினும், உரிமம்பெற்ற வங்கி, அத்தகைய நடவடிக்கைகளை பணிப்பாளர் சபையின் தற்றுணிவின்படி தனியாக அல்லது துணை நடவடிக்கையொன்றாக குறைந்த தகவல்களுடன் மேற்கொள்ளலாம்.

(ஏ) ஊடுருவல் பரீட்சிப்பு வெளிவாரி மற்றும் உள்ளக அச்சுறுத்தல்களையும் பாதிக்கப்படும் தன்மையினையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(ஐ) ஊடுருவல் பரீட்சிப்பு மென்பொருள்/ பிரயோகத்தின் பாதிக்கப்படும் தன்மைகள் அதேபோன்று செய்முறை, வலையமைப்பு மற்றும் தகவல் முறைமைகளின் உட்கட்டமைப்பு களஞ்சியப்படுத்தல் என்பன உள்ளிட்ட தொழில்நுட்பவியல் அடுக்கிலுள்ள பாதிக்கப்படும் தன்மையினைப் பயன்படுத்திக் கொள்வதற்கு முயற்சித்தல் வேண்டும்.

(ஒ) கறுப்புப் பெட்டி ஊடுருவல் பரீட்சிப்பு மற்றும் சாம்பல் நிறப் பெட்டி ஊடுருவல் பரீட்சிப்பு இரண்டினையும் வாடிக்கையாளர், முகாமைத்துவ மற்றும் தொழிற்பாட்டு மட்டத்திலான வியாபார பயன்படுத்துநர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பயன்படுத்துநர்கள் உட்பட வேறுபட்ட பயன்படுத்துநர் வகைகள் பதிவு நற்சான்றிதழ்களைப் பெறவேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு மேற்கொள்ளலாம். எனினும், சாம்பல் நிறப் பெட்டி ஊடுருவல் பரீட்சிப்புக்கு சிறப்புரிமை பெற்ற பயன்படுத்துநர் நற்சான்றிதழ்கள் அவசியமில்லை.

(ஓ) பாதுகாப்பு மனித அல்லது பௌதீக அடுக்குகளில் காணப்படக்கூடிய பாதிக்கப்படும் தன்மையினைப் பயன்படுத்த ஊடுருவல் பரீட்சிப்புக்கள் முயற்சிக்கத் தேவையில்லை.

(ஔ) ஒவ்வொரு ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கையினதும் செயற்பரப்பும் வரைவிலக்கணம் செய்யப்பட்டு ஊடுருவல் பரீட்சிப்பானது செயற்பரப்பு விபரமொன்றில் ஆவணப்படுத்தப்படல் வேண்டும்.

**(iii) தலைமைத்துவக் குழு, செயற்றிட்ட முகாமையாளர், மற்றும் குறித்துரைக்கப்பட்ட தொடர்புப் புள்ளி**

(அ) உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபை, ஒவ்வொரு வருடாந்த ஊடுருவல் பரீட்சிப்பினையும் காத்திரமான முறையில் நடத்துவதற்காக தலைமைத்துவ குழுவொன்றினை நியமித்தல் வேண்டும்.

(ஆ) ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கையின் ஒட்டுமொத்த நடத்தைக்குமான முழு அதிகாரத்தினையும் பொறுப்புக்களையும் தலைமைத்துவக் குழு கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) தலைமைத்துவக் குழுவானது ஊடுருவல் பரீட்சிப்புக்கள் 5.8.3(i) இல் உள்ள குறிக்கோள்களை சிறந்த முறையில் எய்தும் விதத்தில் மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துகின்ற வேளையில் இடர்நேர்வுகள் சரியான முறையில் முகாமைப்படுத்தப்பட்டுள்ளமையினையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஈ) தலைமைத்துவக் குழு போதுமானளவு வியாபார, தொழிற்பாட்டு, தொழில்நுட்ப மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான அறிவினையும் அனுபவத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ) தலைமைத்துவக் குழுவானது பரீட்சிப்பின் போது இன்றியமையாத தீர்மானங்களை மேற்கொள்வதற்குப் போதுமான அதிகாரங்களுடன் முகாமைத்துவக் குழு உறுப்பினர்களையும் பெரும்பாலும் தகவல் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அவதானிப்பாளர்களிலிருந்து சேர்த்துக்கொள்ளப்பட்ட உறுப்பினர்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கியின் எதிர்பாராத நிகழ்வு அதிகரிப்புச் சங்கிலியில் உயர்ந்த தீர்மானங்களை எடுப்பவர்கள் உண்மையான பாதுகாப்பு மீறல்கள் பற்றி சட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்ற அதிகாரிகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துநர்களுக்கு அறிவிக்கும் பொறுப்பினையும் கொண்டிருப்பதுடன் அவர்கள் தலைமைத்துவக் குழுவின் உறுதிப்பினர்களாக இருத்தலும் வேண்டும்.

(ஊ) தலைமைத்துவக் குழுவிற்கு உரிமம்பெற்ற வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலர் அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலருக்கு நேரடியாக அறிக்கையளிக்கின்ற முகாமைத்துவக் குழுவின் உறுப்பினரொருவர் முக்கியமாக முதன்மை தொழிற்பாட்டு அலுவலர்/ தொழிற்பாடுகளின் தலைவர், முதன்மை தகவல் அலுவலர்/ தகவல் தொழில்நுட்பத் தலைவர் அல்லது முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் தலைமை தாங்குதல் வேண்டும்.

(எ) தலைமைத்துவக் குழு, ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கையின் நாளாந்த செயற்றிட்ட முகாமைத்துவத்திற்காக அதன் உறுப்பினர்களில் ஒருவரை செயற்பாட்டு முகாமையாளராக குறித்துரைத்தல் வேண்டும்.

(ஏ) இரண்டு வகிபாகங்களினதும் முக்கியத்துவம் காரணமாக தலைவர் மற்றும் செயற்றிட்ட முகாமையாளர் இருவருக்குமாக குறித்துரைக்கப்பட்ட துணைத் தலைவர்கள் இருத்தல் வேண்டும்.

(ஐ) தீர்மானங்களை மேற்கொள்கின்ற முழு அதிகாரங்களுடன், ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குவோர்களின் மூத்த உறுப்பினரொருவர், தலைமைத்துவக் குழுவிற்காக, குறிப்பிட்ட தொடர்பு மையத்திற்காக நியமிக்கப்படுதல் வேண்டும். தலைமைத்துவக் குழு அதன் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு குறிப்பிட்ட தொடர்பு மையத்தினை அழைக்கலாம்.

**(iv) இடர்நேர்வு முகாமைத்துவம்**

(அ) உரிமம்பெற்ற வங்கிகளின் இடர்நேர்வு ஏற்புக்களுக்கிணங்க இணைந்த இடர்நேர்வுகள் அடையாளம் காணப்பட்டு, மதிப்பிடப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக, ஒவ்வொரு வருடாந்த ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கை பொருத்தமான கட்டுப்பாடுகளை கூட்டிணைத்தல், செய்முறைப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பனவற்றிற்காக முகாமைத்துவக் குழு, இடர்நேர்வு முகாமைத்துவத் திட்டமொன்றினை நிறுவுதல் வேண்டும்.

(ஆ) இடர்நேர்வு முகாமைத்துவத் திட்டமானது பணிகளை மறுக்கும் நிகழ்வுகள் எதிர்பாராத விதத்தில் முறைமை சிதைந்து போதல், முக்கியமான நேரலை உற்பத்தி முறைமைகள், மற்றும் இழப்பு, மாற்றியமைத்தல் அல்லது தரவுகளை வெளிப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கிய ஆனால் அவற்றிற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படாத பல்வேறு இடர்நேர்வு சூழல்களையும் தணிப்பதற்கான இடர்நேர்வு உபாயங்களை விபரமாக குறிப்பிடுகின்ற அனைத்தையுமுள்ளடக்கிய இடர்நேர்வு மதிப்பீடுகளையும் இடர்நேர்வினைக் கையாளும் திட்டத்தினையும் உள்ளடக்குகிறது.

(இ) தலைமைத்துவக் குழுவானது உண்மைச் சம்பவங்களைப் பொறுத்தவரையில் கட்டாயமாக இருக்கக்கூடிய ஆனால் ஊடுருவல் பரீட்சிப்புச் செய்முறையின் காரணமாக நிகழ்வுகள் ஏற்படும் போது அவசியமாகவிராதவற்றின் பொருத்தமான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கான நிகழ்வுகளை அதிகரிக்கும் நடைமுறைகளை தொடர்ச்சியாக கண்காணிப்பதற்கான செய்முறைகளை நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

(ஈ) தலைமைத்துவக் குழுவானது ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கைகளை நிறுத்தலாம் எனக் கருதுவதற்கான ஏதேனும் நிகழ்வுகள் இடம்பெறும் வேளையில் அத்தகைய பரீட்சிப்பு நடவடிக்கைகளை தற்காலிகமாக அல்லது முழுமையாக நிறுத்துமாறு தலைமைத்துவக் குழு கட்டளையிடலாம்.

(உ) சாத்தியமானளவிற்கு உயர்ந்த பயில்தல் அனுபவங்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு, உரிமம்பெற்ற வங்கிகள் ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கையில் முன் அனுபவத்தினைக் கொண்ட குறைந்தபட்ச ஆட்களை அமர்த்தும் பொருட்டு ஆட்களின் எண்ணிக்கையினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இதற்கமைய, தலைமைத்துவக் குழுவானது உரிமம்பெற்ற வங்கியின் ஊழியர்கள் மற்றும் தொடர்பான வெளிவாரி தரப்பினர்களிடையே ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கைகள் முழுமையாகத் தெரிந்திருக்க வேண்டும் ஆட்களைத் தீர்மானித்தல் வேண்டும்.

(ஊ) உரிமம்பெற்ற வங்கிகள் தகவல் முறைமைகளை அடையாளம் காண்பதற்கு குறியீட்டுப் பெயர்களைக் கொண்ட திட்டமொன்றினை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன் தரவுகள் ஊடுருவல் பரீட்சிப்பு நடைமுறைகளினூடாக பரீட்சிக்கப்பட்டு வருதலும் வேண்டும்.

(எ) உரிமம்பெற்ற வங்கிகள், வங்கித்தொழில் தகவல் முறைமைகள் தொடர்பில் ஊடுருவல் பரீட்சிப்புக்களை நடத்துவதில் ஈடுபடுகின்ற ஊடுருவல் பரீட்சிப்புப் பணிகளை வழங்குவோர் போதுமான திறமைகள், தகைமைகள் மற்றும் அனுபவங்களைக் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(ஏ) ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குவோர், ஊடுருவல் பரீட்சிப்புக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் நடவடிக்கையின் மீள் உருவாக்கத்தினை இயலுமைப்படுத்துவதற்காக முழு ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கை தொடர்பான அனைத்தையுமுள்ளடக்கிய பதிவினைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படல் வேண்டும்.

(ஐ) உரிமம்பெற்ற வங்கிகள் ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குவோருடன் வெளிப்படுத்தாத உடன்படிக்கைகளை தாம் மேற்கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள், ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கைக்காக ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குவோரினால் பணிக்கமரித்தப்பட்டுள்ள அனைத்து ஆட்களும் அத்தகைய விபரங்களை வெளிப்படுத்தாது உடன்டிக்கையின் மூலம் பிணிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

**(v) ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குவோரைத் தெரிவுசெய்தல்**

(அ) உரிமம்பெற்ற வங்கிகள் ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குவோரை தெரிவுசெய்வதற்குப் போதுமான உரிய விழிப்புக்கவன வழிமுறைகளுடன் கூடிய வெளிப்படையான கொள்வனவு செய்முறையொன்றினை நடைமுறைப்படுத்தல் வேண்டும். அத்தகைய செய்முறையானது:

(i) உரிமம்பெற்ற வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவுள்ள பணி வழங்குவோரின் முன்னைய வாடிக்கையாளரிடமிருந்து பல்வேறுபட்ட அண்மைய உசாத்துணை விடயங்களைப் பெறுதல்; அத்துடன்

(ii) ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கைக்காக பணி வழங்குவோரினால் கடமைக்கமர்த்தப்பட்ட அனைத்து குழு உறுப்பினர்களினதும் பின்புலம் பற்றி அதிகளவிற்கு ஆய்வு செய்யப்படல் வேண்டும், அல்லது, அத்தகைய அதிகரித்தளவு அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளத்தக்க தரப்பினரைப் பயன்படுத்துமாறு பணி வழங்குவோரை கேட்டுக்கொள்ளுதல்.

என்பவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(ஆ) உற்பத்தி முறைகளின் மீது பரீட்சிப்புக்களை நடத்துவதற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குவோர் வெளிவாரியாக உத்தரவாதப்படுத்தப்பட்ட அவர்களது செய்முறைகளையும் நடவடிக்கைமுறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், உரிமம்பெற்ற வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் ஊடுருவல் பரீட்சிப்பு பணிகளை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் சிறந்த முறையில் தத்துவமளிக்கப்பட்ட அல்லது உறுதிப்படுத்தப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) வெளிவாரி ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குபவரின் தெரிவிற்கு பணிப்பாளர் சபை ஒப்புதலளித்தல் வேண்டும்.

(ஈ) உரிமம்பெற்ற வங்கிகள் ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குபவர்களை, பணிப்பாளர் சபை தீர்மானிக்கும் கால இடைவெளியில் வேறுபட்ட பணி வழங்குபவர்களுக்கு மாற்றிக்கொள்ளலாம்.

**(vi) அச்சுறுத்தல் புலனாய்வுகள் மற்றும் அச்சுறுத்தல் சூழல்களை வடிவமைத்தல்**

(அ) ஊடுருவல் பரீட்சிப்புக்கள் புலனாய்வினை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தலாக இருத்தல் வேண்டும்.

(ஆ) உரிமம்பெற்ற வங்கியும் ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குவோரும் அச்சுறுத்தல் புலனாய்வு மூலங்கள் மற்றும் அச்சுறுத்தல் புலனாய்வுகளை வழங்குவோர் தொடர்பில் பரஸ்பரம் இணங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

(இ) ஊடுருவல் பரீட்சிப்புக்கள் முன்கூட்டியே வடிவமைக்கப்பட்டதாகவும் வங்கிக்கெதிரான யதார்த்தபூர்வமான அச்சுறுத்தல் சூழலையும் அடிப்படையாகக் கொண்டிருத்தலும் வேண்டும். அச்சுறுத்தல் சூழலானது தாக்குதல் நடத்துமொருவரின் கண்ணோட்டத்திலிருந்து சாத்தியமான அதேநேர தாக்குதல் கோட்பாடொன்றினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(ஈ) உள்நாட்டு முறையில் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் அச்சுறுத்தல் சூழல் வழமையாக இலக்கிடப்பட்ட (குறிப்பிட்ட வங்கி) அச்சுறுத்தல் புலனாய்வு மற்றும் பொதுவான அச்சுறுத்தல் புலனாய்வு ஆகிய இரண்டினையும் அடிப்படையாகக் கொண்டு வங்கித்தொழில் துறைக்கு ஏற்புடைத்தான விதத்தில் வடிவமைக்கப்படல் வேண்டும். உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கியின் பணிப்பாளர் சபையானது, வங்கி தொடர்பில் பெறப்படுகின்ற இலக்கிடப்பட்ட அச்சுறுத்தல் புலனாய்வுகள் சாத்தியமற்றனவாக இருக்குமிடத்து, வங்கித்தொழில் துறைக்கு ஏற்புடைத்தான பொதுவான அச்சுறுத்தல் புலனாய்வுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு அச்சுறுத்தல் சூழல்களை வடிவமைப்பதற்கு அனுமதிக்கலாம்.

(உ) உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தவையல்லாதவற்றின் அச்சுறுத்தல் சூழல், பணிப்பாளர் சபையின் தற்றுணிவின்படி இலக்கிடப்பட்ட அச்சுறுத்தல் புலனாய்விற்குப் பதிலாக, வங்கித்தொழில் துறைக்கு ஏற்புடைத்தான பொதுவான அச்சுறுத்தல் புலனாய்வினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கமுடியும்.

(ஊ) ஒவ்வொரு அச்சுறுத்தல் சூழலுக்குமாக, வெற்றிகரமான விட்டுக்கொடுப்பனவுகளை எடுத்துக்காட்டும் விதத்தில், நுழைவு பரீட்சிப்பு பணி வழங்குபவரினால் எய்தப்படக்கூடிய விதத்தில் தெளிவாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட இலக்குகள் காணப்படல் வேண்டும்.

**(vii) ஊடுருவல் பரீட்சிப்பு செயற்பரப்பு அளவு விபரங்கள்**

(அ) ஒவ்வொரு வருடாந்த ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கைகளும் ஊடுருவல் பரீட்சிப்பு செயற்பரப்பு அளவு விபரங்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படல் வேண்டும்.

(ஆ) ஊடுருவல் பரீட்சிப்பு செயற்பரப்பு அளவு விபரங்கள் பயன்படுத்தக்கூடிய பரீட்சிப்பு அச்சுறுத்தல் சூழல், எய்தப்படக்கூடிய இலக்கு மற்றும் பரீட்சிப்புக் கால நேரம் என்பனவற்றிற்குட்பட்டு தகவல் முறைமைகள் மற்றும் தரவுகள் தெளிவாக அடையாளம் காணப்படுதல் வேண்டும்.

(இ) ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குவோர் உரிமம்பெற்ற வங்கியிலிருந்தான உள்ளீடுகள் மற்றும் பெறப்பட்ட அச்சுறுத்தல் புலனாய்வுகள் என்பனவற்றின் அடிப்படையில் ஊடுருவல் பரீட்சிப்பு செயற்பரப்பு அளவு விபரங்களை அபிவிருத்தி செய்தல் வேண்டும் என்பதுடன் இதனை உரிமம்பெற்ற வங்கிகளின் ஒப்புதல்களுக்கு சமர்ப்பித்தலும் வேண்டும்.

(ஈ) ஊடுருவல் பரீட்சிப்பு செயற்பரப்பு அளவு விபரங்கள் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கியே இறுதி அதிகாரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ) ஊடுருவல் பரீட்சிப்பு செயற்பரப்பு அளவு விபரங்களுக்கான ஒப்புதலளிக்கும் அதிகார சபையாக உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபை விளங்குதல் வேண்டும்.

(ஊ) ஊடுருவல் பரீட்சிப்பு பணிகள் வழங்குபவர், ஊடுருவல் பரீட்சிப்பு செயற்பரப்பு அளவு விபரங்களில் குறித்துரைக்கப்பட்ட வரையறைக்குள் ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கைகளை நடத்துவதற்கு ஒப்பந்த ரீதியாக பிணிக்கப்படுகின்றார்.

**(viii) ஊடுருவல் பரீட்சிப்புக்களுக்கான ஒப்புதல்**

(அ) பரீட்சிக்கப்படவேண்டிய தகவல் முறைமைகள், உத்தேச பரீட்சிப்புக்களின் வீரியத்தினை நியாயமான முறையில் எதிர்த்து நிற்கக்கூடியவையாக இருப்பதனை தீர்மானித்ததும் உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையினால் வருடாந்த ஊடுருவல் பரீட்சிப்பினைத் தொடங்குவதற்கும் இறுதிப்படுத்துவதற்கும் ஒப்புதலளிக்கப்படல் வேண்டும்.

(ஆ) இக்கட்டமைப்பினால் தேவைப்படுத்தப்பட்டவாறு ஊடுருவல் பரீட்சிப்பினை எதிர்த்து நிற்பதற்கு ஏதேனும் தகவல் முறைமைகள் போதுமானதாக இல்லை என்பதனை பணிப்பாளர் சபை தீர்மானிக்குமாயின், குறிப்பிட்ட வருடாந்த ஊடுருவல் பரீட்சிப்பு சுழற்சி வட்டத்தில் பரீட்சிக்கப்படுபவரினதும் ஏதேனும் தகவல் முறைமைகளையும் உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபை நீக்கிவிடமுடியும். பணிப்பாளர் சபை அத்தகைய அனைத்து தகவல் முறைமைகளுக்குமான நிவர்த்தி வழிமுறைகளையும் 5.8.3(xi) இல் உள்ளவாறு உடனடியாக முன்னெடுத்தல் வேண்டும்.

(இ) பணிப்பாளர் சபையானது நேரலைச் சூழலில் ஊடுருவல் பரீட்சிப்பினை நடத்துவதற்கு முன்னதாக, ஊடுருவல் பரீட்சிப்பிற்காக தெரிவுசெய்யப்பட்ட ஏதேனும் தகவல் முறைமைகளுக்காக நேரடியற்ற சூழலின் மீது மாதிரி ஊடுருவல் பரீட்சிப்பினை நடத்துவதற்கு தலைமைத்துவக் குழுவினைப் பணிக்கலாம். அத்தகைய மாதிரி ஊடுருவல் பரீட்சிப்பு தகவல் முறைமையொன்றுடன் வெற்றிகரமாக சமரத்துவம் செய்துகொள்ளுமாயின், பணிப்பாளர் சபை நேரலைச் சூழலில் நடத்தப்படுகின்ற பரீட்சிப்பிலிருந்து அத்தகைய தகவல் முறைமைகளை பணிப்பாளர் சபை நீங்கலாம் என்பதுடன் 5.8.3(xi) இல் உள்ளவாறு நிவர்த்தி வழிமுறைகளை நேரடியாக முன்னெடுக்கலாம்.

**(ix) ஊடுருவல் பரீட்சிப்புக்களை நிறைவேற்றல்**

(அ) நேரடியான முறைமைகளில் ஊடுருவல் பரீட்சிப்பினையும் தரவுகளையும் நிறைவேற்றுவது ஊடுருவல் பரீட்சிப்பு செயற்பரப்பு அளவு விபரங்களின் பின்னர் மாத்திரமே தொடருதல் வேண்டும் என்பதுடன் ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குபவருக்கு தலைமைத்துவக் குழுவின் தலைவரினால் எழுத்து மூலம் தொடர்பூட்டப்படுதலும் வேண்டும்.

(ஆ) உரிமம்பெற்ற வங்கிக்கும் ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குபவருக்குமிடையில் பரஸ்பரம் இணங்கிக் கொள்ளப்பட்டமைக்கேற்ப போதுமான நேரம், அனைத்து சூழல்களும் நிறைவேற்றப்பட்டு அனைத்து இலக்குகளையும் எய்துவதற்கு முயற்சிக்கப்படுகின்ற யதார்த்தமானதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான பரீட்சிப்பினை அனுமதிக்கின்ற விதத்தில் நேரடி பரீட்சிப்பு முறைமைகளின் மீது ஊடுருவல் பரீட்சிப்புக்களை நிறைவேற்றுவதற்கு ஒதுக்கப்படல் வேண்டும். ஊடுருவல் பரீசிப்பு பணி வழங்குவோர் ஊடுருவல் பரீட்சிப்புக்கள் பரஸ்பரம் இணைங்கிக் கொள்ளப்பட்ட நேரப்பகுதியில் மாத்திரம் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(இ) ஊடுருவல் பரீட்சிப்பு பணியினை வழங்குபவர் 5.8.3(ix)(அ) மற்றும் (ஆ) என்பனவற்றின் படி அவர்களது கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஒப்பந்த ரீதியாக பிணிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதனை உரிமம்பெற்ற வங்கி உறுதிப்படுத்துதல் வேண்டும்

**(x) வருடாந்த ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கையினை அறிக்கையிடல்**

(அ) உரிமம்பெற்ற வங்கிகள், ஊடுருவல் பரீட்சிப்பு செயற்பரப்பு அளவு விபரங்களின் தேவைப்பாடுகள் எவ்வாறு அடையப்பட்டன என்பது உட்பட, முழு ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் விபரமான அறிக்கையொன்றினை சமர்ப்பிக்குமாறு ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குவோரை தேவைப்படுத்தல் வேண்டும். ஊடுருவல் பரீட்சிப்பு செயற்பரப்பு விபரங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தகவல் முறைமை மற்றும் அச்சுறுத்தல் சூழல் தொடர்பில் அத்தகைய அறிக்கை இணக்கப்பாடு மேற்கொள்ளப்பட்டதா என்பதனையும் இணக்கப்பபாட்டு முறைமைகள் மற்றும் தரவுகள் எவை என்பது பற்றியும் இணக்கப்பாடு எவ்வாறு அடையப்பட்டது என்பது பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) பரீட்சிப்புக் காலம் நிறைவடைந்ததனைத் தொடர்ந்து தலைமைத்துவக் குழு, உரிமம்பெற்ற வங்கியின் தகவல் பாதுகாப்புக் குழு மற்றும் எதிர்பாராத நிகழ்வு பதிலிறுப்புக் குழுவினை கண்டறியப்பட்ட நிகழ்வுகள் தொடர்பிலும் பரீட்சிப்புக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தொடர்பான பதிலிறுப்பு வழிமுறைகள் தொடர்பிலும் அவர்களது அவதானிப்புக்கள் பற்றிய அறிக்கைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

(இ) தலைமைத்துவக் குழு மேற்குறிப்பிட்ட அறிக்கைகளின் அடிப்படையில் ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கை தொடர்பான இறுதி அறிக்கையினை தயாரித்து தகவல் பாதுகாப்புக் குழு மற்றும் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு என்பனவற்றினூடாக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கையானது ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கையின் செயற்பரப்பு மற்றும் பெறுபேறு, வங்கியின் தகவல் பாதுகாப்பு மற்றும் சம்பவ பதிலிறுப்பு ஆயத்த நிலைமை மற்றும் முதன்மை தகவல் அலுவலர்/ தகவல் தொழில்நுட்பவியல் தலைவர் மற்றும் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்களின் ஆலோசனையுடன் உத்தேச நிவர்த்தி வழிமுறைகளின் தொகுப்பினைத் தருகிறது.

**(xi) நிவர்த்தி செய்தல்**

(அ) ஊடுருவல் பரீட்சிப்பின் போது இணக்கம் காணப்பட்ட அல்லது ஊடுருவல் பரீட்சிப்பு செயற்பரப்பிலிருந்து நீக்கப்பட்ட தகவல் முறைமைகளும் தரவுக் களஞ்சியங்களும் உடனடியாக நிவர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(ஆ) உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபை ஊடுருவல் பரீட்சிப்பிலிருந்து நீக்கப்பட்ட அல்லது ஏதேனும் வடிவிலமைந்த வெளிவாரி ஊடுருவல் பரீட்சிப்பின் காரணமாக இணக்கம் காணப்பட்ட ஏதேனும் தகவல் முறைமை அல்லது தரவுக் களஞ்சியம் அடுத்த ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கையின் போது ஊடுருவல் பரீட்சிப்புக்களை எதிர்த்து நிற்கக்கூடிய விதத்தில் போதுமானளவிற்கு நிவர்த்தி செய்யப்பட்ட முடியாவிடின் அவற்றை அகற்றுவது பற்றி அல்லது மூடிவிடுவது பற்றி தீவிரமாக பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும். பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உயர்வானதும் போதுமானதுமான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு வழிமுறைகள் அத்தகைய முறைமை மேம்படும் வரை, அகற்றப்படும் வரை அல்லது மூடப்படும் வரை உடனடியாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

(இ) பணிப்பாளர் சபை ஒன்றில் 5.8.3(xi)(ஆ) இன்படி வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும் அல்லது உள்ளக ஊடுருவல் பரீட்சிப்பின் காரணமாக இணக்கம் ஏற்படும் போது அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகளை அகற்றுவதற்கு உடனடியாக மேலதிகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

**(xii) உள்ளகக் கணக்காய்வு**

வருடாந்த ஊடுருவல் பரீட்சிப்பு செய்முறைகள் அவை நிறைவடைந்ததனை உடனடுத்து கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்படல் வேண்டும்.

**(xiii) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிக்கையளித்தல்**

(அ) உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கை தொடர்பான நிறைவேற்றுத் தொகுப்பொன்றினை உரிமம்பெற்ற வங்கிகள், ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குவோரிடமிருந்து ஊடுருவல் பரீட்சிப்பு அறிக்கையினைப் பெற்றதிலிருந்து 60 நாட்களுக்குள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய நிறைவேற்றுத் தொகுப்பானது, பரீட்சிப்பு, நீக்கப்பட்ட முறைமைகளின் எண்ணிக்கை, இணக்கம் செய்யப்பட்ட முறைமைகளின் எண்ணிக்கை, ஒன்றில் போதுமான நிவர்த்தி வழிமுறைகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றதா அல்லது திருத்த வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட நேரம், இவ்வொழுங்கு முறைப்படுத்தல் கட்டமைப்பிலுள்ள தேவைப்பாடுகளுடன் ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கைகள் இணங்கிச்செல்வது மற்றும் ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குனரைப் பற்றிய சுருக்கமான விபரங்கள் என்பனவற்றிற்குட்பட்டு, முறைமைகளை எடுத்துக்காட்டுகிறது.

### 5.8.4 சுயாதீனமான வெளிவாரி நிபுணர்களின் சிவப்புக் குழு நடவடிக்கைகள்

**(i) செயற்பரப்பு மற்றும் கால இடைவெளி**

(அ) வங்கியினது தகவல் பாதுகாப்பு இயலாற்றலை முழுமையாக விளங்கிக்கொள்ளும் பொருட்டு உரிமம்பெற்ற வங்கிகள் போலிப்படுத்தும் யதார்த்த உலகின் மோசமான சூழலின் பொருட்டு சிவப்புக் குழு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) 5.8.4(i)(இ) இல் உள்ளவாறு, உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையினால் அடையாளம் காணப்பட்ட அனைத்து மிகமுக்கியமான தகவல் முறைமைகளையும் சிவப்புக் குழு நடவடிக்கைக்குள் உள்ளடக்குதல் வேண்டும்.

(இ) உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபை தகவல் பாதுகாப்பு மீறல் காரணமாக உரிமம்பெற்ற வங்கிக்கு கணிசமான மோசமான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் மிகமுக்கியமல்லாத தகவல் முறைமைகளையும் தரவுக் களஞ்சியங்களையும் அடையாளம் காண்பதற்காக அனைத்து மிகமுக்கியமல்லாத தகவல் முறைமைகளையும் தரவுக் களஞ்சியங்களையும் மதிப்பீடு செய்தல் வேண்டும் என்பதுடன் அவற்றை சிவப்புக் குழு நடவடிக்கையின் செயற்பரப்பின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டும்.

(ஈ) சிவப்புக் குழு நடவடிக்கைகள் மனித, பௌதீக மற்றும் தொழில்நுட்வியல் அடுக்குகள் உட்பட, தகவல் பாதுகாப்பின் அனைத்து அடுக்குகளையும் உடைப்பதன் மூலம் தகவல் முறைமைகளுடன் இணக்கம் செய்வதற்கான உயர்ந்தபட்ச முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

(உ) உரிமம்பெற்ற வங்கிகள் 5.8.3இல் குறிப்பிடப்பட்டவாறு, தகவல் பாதுகாப்பின் மனித மற்றும் பௌதீக அடுக்குகள் வரை நுழைவு பரீட்சிப்புக்களை விரிவாக்குவதன் மூலம் சிவப்புக் குழு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ஊ) 5.8.3 இன்படி ஊடுருவல் பரீட்சிப்புடன் சேர்த்து சிவப்புக் குழு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் சுழற்சி வட்டத்தின் போது உரிமம்பெற்ற வங்கிகள் சிவப்புக் குழு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படும்.

(எ) உள்நாட்டின் முறையியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்ற வங்கிகள் ஒவ்வொரு இரண்டாண்டுகளுக்குமொருமுறை சிவப்புக் குழு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் பெறாத வங்கிகள் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்குமொருமுறை சிவப்புக் குழு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**(ii) சிவப்புக் குழுவினது செயற்பரப்பு அறிக்கை**

(அ) சிவப்புக் குழுவினது நடவடிக்கைகள் சிவப்புக் குழு செயற்பரப்பு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ஆ) சிவப்புக் குழுவின் செயற்பரப்பு அறிக்கையானது தகவல் முறைமைகளையும் பரீட்சிப்புக்குட்பட்ட தரவுகளையும் சிவப்புக் குழுவின் கீழ் மதிப்பிடப்படவுள்ள வங்கியினதும் தொடர்பான மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் மற்றும் முகவர்களினதும் அலுவலக உறுப்பினர்களையும் சிவப்புக் குழுவின் கீழ் மதிப்பிடப்படவுள்ள வியாபார தொழிற்பாட்டு பிரிவு மற்றும் அமைவிடங்களையும் சிவப்புக் குழு மதிப்பிடல்களுக்காக பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட உத்திகள் மற்றும் முறையியல்களையும் பயன்படுத்தப்படவுள்ள அச்சுறுத்தல் சூழல்களையும் எய்தப்படவுள்ள இலக்குகளையும் மற்றும் பரீட்சிப்புக் காலத்தினையும் தெளிவாக அடையாளம் காணுதல் வேண்டும்.

(இ) பாதுகாப்பின் மனித மற்றும் பௌதீக அடுக்குகளை மீறுவதற்கு முயற்சிக்கும் பொழுது சிவப்புக் குழு பணி வழங்குவோருக்கு ஏற்புடைத்தான வரையறைகளை சிவப்புக் குழுவினது செயற்பரப்பு அறிக்கை தெளிவாக வரைவிலக்கணம் செய்தல் வேண்டும். சிவப்புக் குழுவினது செயற்பரப்பு அறிக்கையில் தெளிவாக அனுமதிக்கப்பட்ட பணிகளை மேற்கொள்ளமட்டும் பணி வழங்குவோர் அனுமதிக்கப்படுவர்.

(ஈ) சிவப்புக் குழுச் செயற்பரப்பின் அறிக்கைகளுக்கான ஒப்புதலளிக்கும் அதிகார சபையாக உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபை விளங்குதல் வேண்டும்.

(உ) ஒவ்வொரு சிவப்புக் குழு பணி வழங்குவோரும் சிவப்புக் குழு செயற்பரப்பு அறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்குள் ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்த ரீதியாக பிணிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதனை உரிமம்பெற்ற வங்கிகள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**(iii) சிவப்புக் குழு நடவடிக்கைகளை நடத்துவதற்கான ஒப்புதல் மற்றும் நடத்தை விதிகள்**

(அ) சிவப்புக் குழு செயற்றிட்ட அறிக்கை உள்ளிட்ட செயற்பரப்பு, பணி வழங்குவோர், ஆரம்பம் மற்றும் நடவடிக்கைகளை நடத்துவதற்கான சிவப்புக் குழுவின் காலக் கட்டமைப்பு என்பனவற்றிற்கு உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்படல் வேண்டும்.

(ஆ) பணிப்பாளர் சபையானது, சிவப்புக் குழுவின் நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்கு முன்னதாக, சிவப்புக் குழு நடவடிக்கைகளினூடாக பரீட்சிக்கப்படவேண்டிய அனைத்து 3 அடுக்கு பாதுகாப்புக்கள் தொடர்பில் தகவல் பாதுகாப்பு முதிர்ச்சியின் போதுமான மட்டங்களை உரிமம்பெற்ற வங்கி பெற்றுள்ளமையினை உறுதிப்படுத்துதல் வேண்டும். தகவல் பாதுகாப்பு முதிர்ச்சியின் மட்டம் போதுமானதாகவில்லை என பணிப்பாளர் சபை தீர்மானிக்குமாயின், சபையானது பொருத்தமான நிவர்த்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தல் வேண்டும் என்பதுடன் சிவப்புக் குழுவின் நடவடிக்கைகளை உயர்ந்தபட்சம் 12 மாத காலப்பகுதிக்கு பிற்போடுதலும் வேண்டும்.

(இ) உரிமம்பெற்ற வங்கியானது சிவப்புக் குழு நடவடிக்கைகளை நடத்துவதற்கு 5.8.3 இல் குறித்துரைக்கப்பட்ட நடத்தை முறைத் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பொருத்தமான விலக்கல்கள்/ மாற்றல்களுடன் சபை ஒப்புதலளித்த நடத்தை விதிகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

**(iv) நிவர்த்தி செய்தல்**

உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையானது, தொழில்நுட்பவியல் அடுக்கில் காணப்படும் பலவீனங்கள் தொடர்பில் 5.8.3(xi) இல் உள்ளபடியான நிவர்த்தி செய்தல் வழிமுறைகளுக்குப் புறம்பாக, பொருத்தமான வல்லுனர்களின் ஆலோசனையுடன் தகவல் பாதுகாப்பின் மனித மற்றும் பௌதீக அடுக்குகள் தொடர்பில் சிவப்புக் குழு நடவடிக்கைகளின் போது அடையாளம் காணப்பட்ட பலவீனங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

## 6. தகவல் முறைமையின் கிடைப்பனவு மற்றும் அனர்த்த மீட்பு

### 6.1 செயற்பரப்பு

6.2 இலிருந்து 6.6 வரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளை மிகமுக்கியமான தகவல் முறைமைகளுக்கு பிரயோகித்தல் வேண்டும்.

### 6.2 உயர்ந்தளவிற்கு கிடைக்கும்தன்மை

**6.2.1** மிகமுக்கியமான தகவல் முறைமைகள், உயர்ந்த மட்டத்திலான முறைமைகளின் கிடைப்பனவினைப் பெற்றுக்கொள்கின்றன என்பதனை உரிமம்பெற்ற வங்கிகள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6.2.2 சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் விதந்துரைப்பின் அடிப்படையில் பணிப்பாளர் சபை ஒவ்வொரு மிகமுக்கியமான தகவல் முறைமைகளுக்குமாக முறைமைக் கிடைப்பனவு இலக்குகளை நிறுவுதல் வேண்டும்.

6.2.3 சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, மிகமுக்கியமான தகவல் முறைமைகளின் முறைமைக் கிடைப்பனவு இலக்குகளின் சாதனங்கள் கண்காணிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்பட்டமையினை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6.3 அனர்த்த மீட்பு ஏற்பாடுகள்

6.3.1 பின்வரும் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளை உறுதிப்படுத்துகின்ற விதத்தில், சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் விதந்துரைப்புக்களின் மீது பணிப்பாளர் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட மீட்பு நேரக் குறிக்கோள்கள் மற்றும் அனர்த்த மீட்பு நிலைய குறிக்கோள்களுடன் மிகமுக்கியமான தகவல் முறைமைகள் இணங்கியொழுவதற்கான அனர்த்த மீட்பு ஏற்பாடுகளை உரிமம்பெற்ற வங்கிகள் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

(i) உள்நாட்டு-முறையியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்ற உரிமம்பெற்ற வங்கிகளின் மிகமுக்கியமான தகவல் முறைமைகளுக்காக 4 மணித்தியாலங்களுக்குக் குறைவான மீட்பு நேரக் குறிக்கோள்களையும் உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் குறைந்த உரிமம்பெற்ற வங்கிகளின் மிகமுக்கியமான தகவல் முறைமைகள் 6 மணித்தியாலங்களுக்கும் குறைவான மீட்பு நேரக் குறிக்கோள்களையும் கொண்டிருத்தல்; அத்துடன்

(ii) பூஜ்யத்தினை அல்லது கிட்டிய பூஜ்யத்தினைக் கொண்ட மீட்பு நேரக் குறிக்கோள்கள் (அதாவது அனர்த்தத்தின் போது தரவு இழப்பு ஏற்படாமை)

6.3.2 உரிமம்பெற்ற வங்கிகள், ஏதேனும் தகவல் முறைமைக்காக 6.3.1 இன் கீழ் தீர்மானிக்கப்பட்ட மீட்பு நேரக் குறிக்கோள் மற்றும் மீட்பு மையக் குறிக்கோள் இலக்குகள் வேறுஏதேனும் சட்டம் அல்லது ஒழுங்குவிதிகளினால் அத்தகைய தகவல் முறைமைகள் மீது விதிக்கப்பட்ட ஏதேனும் புதிய மீட்பு நேரக் குறிக்கோள்கள் மற்றும் மீட்பு மையக் குறிக்கோள்களுடன் இணங்கிச்செல்வதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6.4 அனர்த்த மீட்பினைச் செயற்படுத்தல்

6.4.1 உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையானது சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்புக் குழு என்பனவற்றின் விதந்துரைப்புக்களினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மிகமுக்கியமான தகவல் முறைமைக்குமாக அனர்த்த மீட்பு நடவடிக்கைகளை உந்தும் செயற்பாடொன்றினை நிறுவுதல் வேண்டும்.

6.4.2 அத்தகைய நடவடிக்கை செயற்பாடுகள் 6.3இல் குறித்துரைக்கப்பட்ட மீட்பு நேரக் குறிக்கோள் இலக்குடன் இசைந்துசெல்லும் விதத்தில் அனர்த்த மீட்பு ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்குப் போதுமான நேரத்தினைக் கொண்டிருப்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6.5 அனர்த்த மீட்புப் பரீட்சிப்பு

6.5.1 அனர்த்த மீட்பு உட்கட்டமைப்பின் ஏற்பாடுகளை அனைத்து மிகமுக்கியமான தகவல் முறைமைகளையும் பயன்படுத்தி, குறைந்தபட்சம் ஆண்டிற்கொருதடவை 7 நாட்கள் அல்லது அதற்கும் கூடுதலான காலப்பகுதிக்கு பரீட்சித்தல் வேண்டும்.

6.5.2 6.5.1 இன்படி, அனர்த்த மீட்பு உட்கட்டமைப்பின் பரீட்சிப்பிற்குப் புறம்பாக, அனர்த்த மீட்பு உருப் போலிகளின் வருடாந்த சுழற்சி, தேவைப்படுத்தப்பட்ட மீட்பு நேரக் குறிக்கோள் மற்றும் மீட்பு மையக் குறிக்கோளை எய்துவதற்கு, உரிமம்பெற்ற வங்கியின் வேறுபட்ட அனர்த்த சூழல்களின் கீழ் இயலாற்றலைத் தீர்மானிப்பதற்காக, பணிப்பாளர் சபை நடைமுறைப்படுத்துவதற்கு இயலக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதுடன் அவசியமானவிடத்து தேவையான சீர்செய்யும் வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும்.

### 6.6 வேறோரிடத்தில் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் மீட்புக் கொள்கைகள்

உரிமம்பெற்ற வங்கிகள் மிகமுக்கியமான தகவல் முறைமைகளுக்கு ஏற்புடைத்தான வேறோரிடத்தில் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் மீட்புக் கொள்கைகள் மற்றும் நடைமுறைப்படுத்தல் விதிகள் சரியான முறையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளமையினையும் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளமையினையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். அத்தகைய கொள்கைகள் மிகமுக்கியமான தகவல் முறைமைகளுக்கு பிரயோகிக்கத்தக்க தொழில்துறையின் மிகச் சிறந்த நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும்படி வேண்டும் என்பதுடன் இணையவழியல்லா மற்றும் தலத்திற்கு வெளியேயான கணக்கெடுப்புக்கள் அல்லது அத்தகைய கணக்கெடுப்புக்கள் பேணும் குறிக்கோள்களை எய்தும் பொருத்தமான பொறிமுறைகளை வழங்குதல் வேண்டும்.

## 7. அலுவலர் தகைமைத் தேவைப்பாடுகள்

7.1 இலிருந்து 7.5 வரை உள்ளவற்றினால் தேவைப்படுத்தப்பட்டவாறு தகவல் பாதுகாப்பு, தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளில் உரிய தகைமைகளுடன் கூடிய குறைந்தபட்சம் குறைந்த எண்ணிக்கையுடய அலுவலர்கள் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளமையினை உரிமம்பெற்ற வங்கிகள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

### 7.1 அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

7.1.1 மற்றும் 7.1.2 இல் குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களின், கீழே அட்டவணை 1 மற்றும் 2 இல் உள்ளவாறான கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகள் தகுதிவாய்ந்த தகைமைகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

#### 7.1.1 கல்விசார் தகைமைகள்

பல்கலைக்கழகமொன்றினால் அல்லது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட முதுமானி மற்றும் இளமானிப் பட்டங்கள் அல்லது மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியலாளர் நிறுவனத்தின் ஆதரவுடன் தத்துவம் பெற்ற சபையொன்றினால் தத்துவமளிக்கப்பட்ட நிறுவனத்தின் முதுமானி மற்றும் இளமானி மட்டத்திலான பட்டங்கள்

#### 7.1.2 தொழில்சார் தகைமைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்

(i) ISACA; - தகவல் முறைமைக் கணக்காய்வு மற்றும் கட்டுப்பாட்டுச் சங்கம்

(ii) $(ISC)^2$; அத்துடன் இணையத்தள மென்பொருள் உட்கட்டமைப்பு

(iii) உலகளாவிய தகவல் உத்தரவாதச் சான்றிதழ்

**7.1.3** ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் தகைமைகள் இடைநிறுத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அதே தொழில்சார் நிறுவனத்தினால் அல்லது அதனைத் தொடர்ந்து வந்த நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அதே பட்டம் மாற்று தொழில்சார் தகைமையாக பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

**7.1.4** இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டவையும் தகவல் பாதுகாப்புத் தொழிற்பாடுகளை இலங்கைக்கு வெளியே கையாளுகின்றவையுமான உரிமம்பெற்ற வங்கிகள் இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள அலுவலர்களுக்கான மாற்றுத் தகைமைகளாக தலைமை அலுவலகத்தின் மனித வளங்களின் தலைவரினால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒத்த பன்னாட்டு தகைமைகளை குறித்துரைக்கலாம்.

### 7.2 முதன்மைத் தகவல் பாதுகாப்பு அலுவருக்கான தகைமைத் தேவைப்பாடுகள்

பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தினை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்ற உரிமம்பெற்ற வங்கியின் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் 7.4 இல் பட்டியலிடப்பட்டுள்ள தகுதியுடைய தகைமைகளிலிருந்து குறைந்தபட்சம் ஒரு தகைமையினையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

7.3 தகைமையுடைய அலுவலர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை

உரிமம்பெற்ற வங்கிகள் பகுப்பாய்வு/ நிறைவேற்று அத்துடன் தகவல் பாதுகாப்புத் தொழிற்பாடுகளின் முகாமைத்துவ மட்டம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணையத்தள கணக்காய்வுத் தொழிற்பாடுகள் ஆகிய இரண்டிற்குமாக குறைந்தபட்சம் ஒரு தகவுடைய தகைமையினையாவது கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு தொழிற்பாட்டிற்கும் தகவுடைய தகைமைகளுக்குமான தேவைப்படும் அலுவலர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை 7.4இல் உள்ளவாறு இருத்தல் வேண்டும். வெளியிலிருந்து பணிகளைப் பெற்றக்கொள்வதனைப் பொறுத்தவரையில் தகவுடைய தகைமைகளுடன் வங்கிக்கு ஒதுக்கப்பட்ட மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரின் அலுவலர் எண்ணிக்கை இத்தேவைப்பாடுகளுக்கேற்ப கணக்கிடப்படுதல் வேண்டும்.

7.4 தகவுடைய தகைமைகள் மற்றும் தகைமைபெற்ற அலுவலர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை

7.4.1 முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் மற்றும் முகாமைத்துவ ரீதியான மட்டம்

அட்டவணை 1: தகவுடைய தகைமைகள் மற்றும் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலகர் மற்றும் முகாமைத்துவ மட்டத்திற்கான தகைமையுடைய அலுவலர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை

| இல. | தகைமைகள்/ வங்கி வகை | முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் | தகவல் பாதுகாப்பு தொழிற்பாடுகள் (பாதுகாப்புத் தொழிற்பாடுகள் நிலையம் உட்பட) | இடர்நேர்வு முகாமைத்துவம் | உள்ளகக் கணக்காய்வு |
|---|---|---|---|---|---|
| 1. | தகவுடைய தகைமைகள் | | | | |
| 1.1 | (இணையத்தள மென்பொருள் கூட்டமைப்பு)[2] சான்றுபடுத்தப்பட்ட தகவல் முறைமைகள் பாதுகாப்பு தொழில்சார் தகைமைகள் | X | X | X | X |
| 1.2 | ஜிஐஏசி உபாயத் திட்டமிடல், கொள்கை மற்றும் தலைமைத்துவம் | X | | | |
| 1.3 | ஜிஐஏசி தகவல் பாதுகாப்பு தொழில்சார் தகைமை | X | X | X | X |
| 1.4 | தகவல் முறைமை கணக்காய்வு மற்றும் கட்டுப்பாட்டுச் சங்கம் சான்றுபடுத்தப்பட்ட தகவல் பாதுகாப்பு கணக்காய்வாளர் | X | | | X |
| 1.5 | தகவல் முறைமை கணக்காய்வு மற்றும் கட்டுப்பாட்டுச் சங்கம் சான்றுபடுத்தப்பட்ட தகவல் பாதுகாப்பு முகாமையாளர் | X | | X | |
| 1.6 | தகவல் முறைமை கணக்காய்வு கட்டுப்பாட்டுச் சங்கம் மற்றும் சான்றுபடுத்தப்பட்ட இடர்நேர்வு மற்றும் தகவல் முறைமைகள் கட்டுப்பாடு | X | | X | |
| 1.7 | தகவல் பாதுகாப்பில் முதுமானிப் பட்டம் அல்லது கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பவியல் தகவல் பாதுகாப்பிலுள்ள விசேடத்துவத்துடன் முதுமானிப் பட்டம் | X | X | X | X |

| 2. | தகவுடைய தகைமைகளுடன் கூடிய அலுவலர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| 2.1 | உள்நாட்டு - முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாயந்த வங்கிகள் | 1 | 2 | 1 | 2 |
| 2.2 | உள்நாட்டு - முறையியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்ற வங்கிகள் பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தினை ஏற்படுத்துவதற்கு | 1 | 1 | - | 1 |
| 2.3 | உள்நாட்டு - முறையியல் ரீதியில் முக்கியத்துவம் பெறாத வங்கிகள் பாதுகாப்புத் தொழிற்பாடுகள் நிலையத்தினை ஏற்படுத்துவதற்கு | -* | - | - | - |

* தகவல் தொழிற்பாட்டு நிலையத்தினை ஏற்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்படாத வங்கிகளின் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலருக்கான கட்டாயமற்ற தகைமைத் தேவைப்பாடு

### 7.4.2 பகுப்பாய்வு/ நிறைவேற்று அலுவலர் மட்டம்

**அட்டவணை 2: தகவுடைய தகைமைகள் மற்றும் பகுப்பாய்வாளர்/ நிறைவேற்று அலுவலர் மட்டத்திற்கான தகைமையுடைய அலுவலர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை**

| இல. | தகைமைகள்/ வங்கி வகை | தகவல் பாதுகாப்பு தொழிற்பாடுகள் (பாதுகாப்பு தொழிற்பாடுகள் நிலையம் உட்பட) | இடர்நேர்வு முகாமைத்துவம் | உள்ளகக் கணக்காய்வு |
|---|---|---|---|---|
| 1. | தகவுடைய தகைமைகள்: | | | |
| 1.1 | (இணையத்தள மென்பொருள் கூட்டமைப்பு)[2] முறைமைகள் பாதுகாப்பு சான்றளிக்கப்பட்ட தொழில் நடத்துநர் | X | X | X |
| 1.2 | தகவல் முறைமை கணக்காய்வு மற்றும் கட்டுப்பாட்டு சிஎஸ்எக்ஸ் தொழில் நடத்துநர் சான்றிதழ் (சிஎஸ்எக்ஸ்பி) | X | X | X |
| 1.3 | ஜிஐஏசி பாதுகாப்பு இன்றியமைவாது (ஜிஎஸ்ஈசி) | X | X | X |
| 1.4 | தகவல் பாதுகாப்பில் இளமானிப் பட்டம் அல்லது கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பவியல் தகவல் பாதுகாப்பு விசேடத்துவத்தில் இளமானிப்பட்டம் | X | X | X |
| 1.5 | தொடர்பான முகாமைத்துவ மட்டத்தின் தகைமை | X | X | X |
| 2. | தகவுடைய தகைமைகளுடன் அலுவலர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை | | | |
| 2.1 | உள்நாட்டு - முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாயந்த வங்கிகள் | 5 | 1 | 3 |
| 2.2 | உள்நாட்டு - முறையியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்ற வங்கிகள் பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தினை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது | 2 | 1 | 2 |
| 2.3 | உள்நாட்டு - முறையியல் ரீதியில் முக்கியத்துவம் பெறாத வங்கிகள் பாதுகாப்புத் தொழிற்பாடுகள் நிலையத்தினை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படவில்லை | 1 | - | 1 |

7.5 தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தித் தேவைப்பாடு

7.5.1 அலுவலர்கள் தகவுடைய தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருத்தல்

தகவுடைய தொழில்சார் தலைமையொன்றினைக் கொண்டுள்ள அலுவலர் உறுப்பினர்கள் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தித் தேவைப்பாட்டினை அல்லது வருடாந்தம் 20 மணித்தியாலம் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தியினை இதில் எது உயர்வானதோ அதனைப் பூர்த்திசெய்தல் வேண்டும். தகவுடைய கல்விசார் தகைமையைக் கொண்டிருக்கும் அலுவலக உறுப்பினர்கள் மேலே பட்டியலிடப்பட்டுள்ள தொடர்பான தகவுடைய தொழில்சார் தகைமைகளினால் வழங்கப்படும் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தியைப் பூர்த்திசெய்வதன் மூலம் குறைந்தபட்சம் 20 மணித்தியாலம் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தியை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.

7.5.2 ஏனைய அலுவலர்கள்

தகவல் பாதுகாப்புத் தொழிற்பாடுகள், தொழில்நுட்பவியல்/ தகவல் பாதுகாப்பு இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தகவல் பாதுகாப்பு கண்காணிப்பு என்பனவற்றில் தொழில்புரியும் மற்றைய அனைத்து அலுவலர்களும் தகவல் பாதுகாப்புக் குழுவின் விதந்துரைப்பின் மீது சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் நிறைவுசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை குறைந்தபட்சம் 20 மணித்தியாலம் கொண்ட தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தியினைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

7.5.3 அலுவலக உறுப்பினர்கள் தகவுடைய தகைமைகளைக் கொண்டிருப்பினும் கூட தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தித் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்ய தவறுமிடத்து தகவுடைய தகைமையுடைய அலுவலர்கள் எண்ணிக்கையினை தீர்மானிக்கும் போது அவர்கள் பரிசீலனையில் கொள்ளப்படமாட்டார்கள்.

8. பன்னாட்டு தரங்களுடன் இணங்கியொழுகுதல்

8.1 உரிமம்பெற்ற வங்கிகள் தரப்படுத்தலுக்கான பன்னாட்டு அமைப்பின் பின்வரும் நியமங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும் என்பதுடன் கீழே காட்டப்பட்டவாறு சான்றிதழ்களை அல்லது உத்தரவாதங்களைப் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும்.

அட்டவணை 3: கட்டாயமான தரப்படுத்தலுக்கான பன்னாட்டு அமைப்பு நியமங்கள்

| எண். | நியமம் | செயற்பரப்பு | சான்றிதழ் வழங்கல்/ உத்தரவாதம் |
|---|---|---|---|
| 8.1.1 | **ஐஎஸ்ஓ/ ஐஈசி இன் பிந்திய பதிப்பு 27001** தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள் | ஐஎஸ்ஓ/ ஐஈசி 27001 செயற்பரப்பு மிகமுக்கியமான தகவல் முறைமைகள், வாடிக்கையாளர் தரவுகளை வெளிப்படுத்தும் உட்கட்டமைப்பு முறைமைகள் மற்றும் வாடிக்கையாளர் தரவு மற்றும் இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத தரவு என்பனவற்றுடன் இணைந்த வியாபர/ தொழிற்பாட்டு பிரிவுகள் அமைவிடயங்கள் மற்றும் தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்க வேண்டும்.<br><br>இவ்வொழுங்கு விதிகளின் கட்டமைப்பினாலும் இலங்கை மத்திய வங்கியின் மற்றைய ஒழுங்குவிதிகளினாலும் விதிக்கப்பட்ட அனைத்து ஏற்புடைத்தான தேவைப்பாடுகளும் இந்நியமங்களை நடைமுறைப்படுத்தும் போது பின்பற்றப்படுதல் வேண்டும். | **உள்நாட்டில் முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள்:**<br><br>தத்துவம் பெற்ற சான்றிதழ் வழங்கும் நிறுவனத்திலிருந்தான சான்றிதழ்<br><br>**உள்நாட்டில் முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்திராத வங்கிகள்:**<br><br>பணிப்பாளர் சபையானது உரிமம்பெற்ற வங்கியின் தகவல் பாதுகாப்பு இடர்நேர்வு மிகக் குறைவானதும் தத்துவம் பெற்ற சான்றிதழ் தேவையற்றது எனவும் தீர்மானிக்குமிடத்து தத்துவம் பெற்ற சான்றிதழ் வழங்கும் நிறுவனத்திலிருந்தான சான்றிதழ் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிவாரி கணக்காய்வாளரிடமிருந்தான உத்தரவாதம்.<br><br>உத்தரவாதத்தினைக் குறைந்தபட்சம் ஒவ்வொரு இரண்டாண்டுகளுக்குமொரு முறை மீளாய்வு செய்தல் வேண்டும். |
| 8.1.2 | **ஐஎஸ்ஓ/ ஐஈசி 27035 இன் பிந்திய பதிப்பு** தகவல் பாதுகாப்பு சம்பவங்களின் முகாமைத்துவம் | ஐஎஸ்ஓ/ ஐஈசி 27035இன் செயற்பரப்பு வியாபாரம்/ தொழிற்பாட்டு பிரிவுகள், அமைவிடங்கள், மற்றும் மிகமுக்கியமான தகவல் முறைமை மற்றும் வாடிக்கையாளர் தரவு மற்றும் இரகசியமான வாடிக்கையாளர் அல்லாதவர்களின் தரவுகளை வெளிப்படுத்தும் தகவல் முறைமைகளுடன் இணைந்த தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்க வேண்டும்.<br><br>இவ்வொழுங்கு விதிகளின் கட்டமைப்பினாலும் இலங்கை மத்திய வங்கியின் மற்றைய ஒழுங்குவிதிகளினாலும் விதிக்கப்பட்ட அனைத்து ஏற்புடைத்தான தேவைப்பாடுகளும் இந்நியமங்களை நடைமுறைப்படுத்தும் போது பின்பற்றப்படுதல் வேண்டும். | சபைக் கணக்காய்வுக் குழுவினூடாக உரிமம்பெற்ற வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளிலிருந்தான உத்தரவாதம் அல்லது உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பொருத்தமான தரப்பினரிடமிருந்தான சான்றிதழ்/ உத்தரவாதம்<br><br>உத்தரவாதமானது குறைந்தபட்சம் இரு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 8.1.3 | **ஐஎஸ்ஓ/ ஐஈசி 22301 இன் பிந்திய பதிப்பு** தடங்கலற்ற வியாபார முகாமைத்துவ முறைமைகள் | ஐஎஸ்ஓ/ ஐஈசி 22301 இன் செயற்பரப்பானது வியாபாரம்/ தொழிற்பாட்டு பிரிவு மற்றும் செய்முறையும் மிகமுக்கியமான தகவல் முறைமைகளின் கிடைப்பனவிற்காக தேவைப்படும் உட்கட்டமைப்பினையும் உள்ளடக்க வேண்டும்.<br>இவ்வொழுங்குவிதிகளின் கட்டமைப்பினாலும் இலங்கை மத்திய வங்கியின் மற்றைய ஒழுங்குவிதிகளினாலும் விதிக்கப்பட்ட அனைத்து ஏற்புடைத்தான தேவைப்பாடுகளும் இந்நியமங்கள் நடைமுறைப்படுத்தும் போது பின்பற்றப்படுதல் வேண்டும். | சபைக் கணக்காய்வுக் குழுவினூடாக உரிமம்பெற்ற வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளிலிருந்தான உத்தரவாதம் அல்லது உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பொருத்தமான தரப்பினரிடமிருந்தான சான்றிதழ்/ உத்தரவாதம்<br>உத்தரவாதமானது குறைந்தபட்சம் இரு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |
| 8.1.4 | **ஐஎஸ்ஓ/ ஐஈசி 20000 இன் பிந்திய பதிப்பு,** பணி முகாமைத்துவம் | ஐஎஸ்ஓ/ ஐஈசி 20000 இன் செயற்பரப்பானது தகவல் தொழில்நுட்பத்தினையும் மிகமுக்கியமான தகவல் முறைமை மற்றும் வாடிக்கையாளர் தரவு மற்றும் இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத தரவுகளை வெளிப்படுத்துகின்ற தகவல் முறைமைகளுடனும் இணைந்த தகவல் பாதுகாப்புடன் தொடர்பான பணி வழங்கல் தொழிற்பாடுகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.<br>இவ்வொழுங்குவிதிகளின் கட்டமைப்பினாலும் இலங்கை மத்திய வங்கியின் மற்றைய ஒழுங்குவிதிகளினாலும் விதிக்கப்பட்ட அனைத்து ஏற்புடைத்தான தேவைப்பாடுகளும் இந்நியமங்கள் நடைமுறைப்படுத்தும் போது பின்பற்றப்படுதல் வேண்டும். | சபைக் கணக்காய்வுக் குழுவினூடாக உரிமம்பெற்ற வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளிலிருந்தான உத்தரவாதம் அல்லது உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பொருத்தமான தரப்பினரிடமிருந்தான சான்றிதழ்/ உத்தரவாதம்<br>உத்தரவாதமானது குறைந்தபட்சம் இரு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |

8.2 தரப்படுத்தலுக்கான பன்னாட்டு அமைப்பின் மேற்குறிப்பிட்ட ஏதேனும் நியமங்கள் இடைநிறுத்தப்படும் சமயத்தில், உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபை அதையடுத்து தொடர்பான நியமங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும் அல்லது அதையடுத்து தொடர்வதற்கான நியமங்கள் இல்லாதிருக்குமிடத்து மாற்று நியமங்களை அடையாளம் கண்டு அவற்றை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

## 9. தகவல் முறைமை உட்கட்டமைப்புச் சொத்துடமை, முகாமைத்துவம் மற்றும் அமைவிடத்தினை அடிப்படையாகக் கொண்ட தேவைப்பாடுகள்

### 9.1 தகவல் முறைமை உட்கட்டமைப்புச் சொத்துடமை, முகாமைத்துவம் மற்றும் அமைவிடங்களின் தீர்மானம்

#### 9.1.1 தீர்மானங்கள்

சொத்துடமை அத்துடன்/ அல்லது தகவல் முறைமைக் கட்டமைப்பின் முகாமைத்துவம் சொத்துடமையினைக் கொண்டுள்ள அத்துடன்/ அல்லது செய்முறைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், வலையமைப்பு மற்றும் தகவல் முறையொன்றின் ஏனைய அடிப்படையான கணிப்பிடல் மூலவளங்கள் என்பனவற்றின் முகாமைத்துவத்திற்கான பொறுப்புக்களைக் கொண்டுள்ள தரப்பினரால் தீர்மானிக்கப்படல் வேண்டும். அமைவிடமானது மேற்குறிப்பிட்ட அனைத்துக் கூறுகளும் அமைப்புப் பெற்றுள்ள இடத்தினால் தீர்மானிக்கப்படுகிறது.

9.1.2 சொத்துடமையினை தீர்மானிப்பதற்கான பிரமாணம்

தகவல் முறைமையொன்று தொடர்பில் 9.1.1இல் குறிப்பிடப்பட்ட அனைத்து கூறுகளினாலும் சொத்துடமையினை உரிமம்பெற்ற வங்கி கொண்டிருக்குமிடத்து தகவல் முறைமை உட்கட்டமைப்பு "வங்கியின் உடமை" ஆக மாத்திரமே கருதப்படல் வேண்டும். மற்றைய அனைத்து சொத்துடமை ஏற்பாடுகளும் "மூன்றாம் தரப்பு பணி வழங்குவோருக்கு சொந்தமானது" எனக் கருதப்படல் வேண்டும்.

9.1.3 முகாமைத்துவத்தினை தீர்மானிப்பதற்கான பிரமாணம்

தகவல் முறைமையொன்று தொடர்பில், 9.1.1இல் குறிப்பிடப்பட்ட அனைத்து கூறுகளும் உரிமம்பெற்ற வங்கியின் ஊழியர்களினால் முகாமைப்படுத்தப்படுமாயின் தகவல் முறைமை உட்கட்டமைப்பு "வங்கியினால் முகாமைப்படுத்தப்படுகிறது" என்று மாத்திரம் கருதப்படல் வேண்டும். மற்றைய அனைத்து முகாமைத்துவ ஏற்பாடுகளும் "மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் முகாமைப்படுத்தப்படுகிறது" எனக் கருதப்படல் வேண்டும்.

9.1.4 அமைவிடத்தினைத் தீர்மானிப்பதற்கான பிரமாணம்

தகவல் முறைமையொன்று தொடர்பில், 9.1.1இல் குறிப்பிடப்பட்ட அனைத்துக் கூறுகளும் இலங்கையில் இருக்குமாயின், தகவல் முறைமைக் கட்டமைப்பு "இலங்கையில் அமையப் பெற்றுள்ளது" என்று மாத்திரம் கருதப்படல் வேண்டும். மற்றைய அனைத்து ஏற்பாடுகளும் "இலங்கைக்கு வெளியே அமையப் பெற்றுள்ளது" எனக் கருதப்படுதல் வேண்டும்.

9.1.5 இதற்கமைய, இவ்வொழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்குள் 9.2 இலிருந்து 9.9 வரையான தேவைப்பாடுகளுக்குள் பின்வரும் மாதிரியின் பரிசீலனையில் கொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(i) இலங்கையில் அமையப்பெற்றுள்ள வங்கிக்கு சொந்தமானவையும் அதனால் முகாமைப்படுத்தப்படுபவையும்;

(ii) இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள வங்கிக்குச் சொந்தமானவை மற்றும் அதனால் முகாமைப்படுத்தப்படுபவை;

(iii) வங்கிக்கு சொந்தமானது, மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் முகாமைப்படுத்தப்படுவதுடன் இலங்கைக்கு வெளியே அமைந்துள்ளவை;

(iv) வங்கிக்குச் சொந்தமானதும், மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் முகாமைப்படுத்துவது, மற்றும் இலங்கைக்கு வெளியே அமைந்துள்ளவை;

(v) மூன்றாம் தரப்பு பணி வழங்குவோருக்குச் சொந்தமானவை மற்றும் இலங்கையில் அமைந்துள்ளவை; மற்றும்

(vi) மூன்றாம் தரப்பு பணி வழங்குவோருக்குச் சொந்தமானவை மற்றும் இலங்கைக்கு வெளியே அமைந்துள்ளவை.

9.2 வங்கிக்குச் சொந்தமானவை மற்றும் முகாமைப்படுத்தப்படுபவை, இலங்கையில் அமைந்துள்ளவை.

இம்மாதிரிக்கு மேலதிக தேவைப்பாடுகள் பிரயோகிக்கப்படலாகாது.

9.3 வங்கிக்கு சொந்தமானவை மற்றும் முகாமைப்படுத்தப்படுபவை இலங்கைக்கு வெளியே அமைந்துள்ளவை.

9.3.1 தலைமை அலுவலகத்திற்குச் சொந்தமானதும் அதனால் முகாமைப்படுத்தப்படுவதுமான தகவல் முறைமை உட்கட்டமைப்பினைப் பயன்படுத்துகின்ற போது இம்மாதிரியின் பயன்பாடு வழமையாக இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அனுமதிக்கப்படுகிறது.

9.3.2 இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள தகவல் முறைமைக் கட்டமைப்பினைப் பயன்படுத்துவது இன்றியமையாததாக இருக்குமிடத்து, இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள ஏதேனும் கிளை அல்லது வியாபாரப் பிரிவின் தொழிற்பாடுகளுக்கு வசதியளிப்பது தவிர, உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்டுள்ள உரிமம்பெற்ற வங்கிகள் இம்மாதிரியினைப் பயன்படுத்தலாகாது.

9.3.3 இம்மாதிரியினைப் பயன்படுத்துகின்ற இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள் இலங்கையிலிருந்தான முதலாந்தர மற்றும் அனர்த்த மீட்பு அமைவிடங்கள் மற்றும் முதலாந்தர மற்றும் அனர்த்த மீட்பு அமைவிடங்களுடன் பல்வேறுபட்ட கிடைப்பனவுகள், முழுமையான சுயாதீனமான தொலைத்தொடர்பூட்டல் இணைப்புக்கள், முழுவேலைப் பழுக்களையும் செய்துமுடிக்கின்ற தனிப்பட்ட இயலாற்றல் என்பனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

9.3.4 இம்மாதிரி, மிகமுக்கியமான தகவல் முறைமைகளுக்காக பயன்படுத்தப்படும் போது உள்நாட்டில் முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்கும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள் இவ்வொழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் பிரிவு 6இல் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் முழுமையாக பரீட்சிக்கப்பட்ட அனர்த்த மீட்பு ஏற்பாடுகள் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**9.4 வங்கிக்குச் சொந்தமானவை, மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் முகாமைப்படுத்தப்பட்டு, இலங்கையில் அமைந்துள்ளவை**

உரிமம்பெற்ற வங்கிகள், 9.8 மற்றும் 9.9இல் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுவதற்கு உட்பட்டு, இம்மாதிரியினைப் பயன்படுத்தலாம்.

**9.5 வங்கிக்குச் சொந்தமானவை, மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் முகாமைப்படுத்தப்பட்டு இலங்கைக்கு வெளியில் அமைந்துள்ளவை**

9.5.1 இம்மாதிரி, உரிமம்பெற்ற வங்கிகளின் தலைமை அலுவலகத்தினால் கட்டாயமாக்கப்பட்டிருக்குமிடத்து இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள அத்தகைய உரிமம்பெற்ற வங்கிகள் 9.3, 9.8 மற்றும் 9.9இல் உள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுவதற்கு உட்பட்டு இம்மாதிரிகளைப் பயன்படுத்தலாம்.

9.5.2 இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள தகவல் முறைமை உட்கட்டமைப்பினைப் பயன்படுத்துவது இன்றியமையாததாக இருக்குமிடத்து, இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள ஏதேனும் கிளையின் அல்லது வியாபாரப் பிரிவிற்கு வசதியளிப்பதற்கு தவிர, உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள் இம்மாதிரியினைப் பயன்படுத்தலாகாது.

**9.6 மூன்றாம் தரப்பு பணி வழங்குபவருக்குச் சொந்தமான மற்றும் இலங்கையில் அமைந்துள்ளவை**

9.6.1 9.8 மற்றும் 9.9இன் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு உட்பட்டு, உரிமம்பெற்ற வங்கிகள் இம்மாதிரியினைப் பயன்படுத்தமுடியும்.

9.6.2 மிகமுக்கியமான தகவல் முறைமைகளுக்கான உரிமம்பெற்ற வங்கிகள் இம்மாதிரியினைப் பயன்படுத்தும்பொழுது பின்வருவனவற்றுடனும் இணங்கிச் செல்வதாக இருத்தல் வேண்டும்.

(i) மூன்றாம் தரப்பு பணி வழங்குபவருக்குச் சொந்தமான தகவல் முறைமை உட்கட்டமைப்பு ஐஎஸ்ஓ 22301 இன் பிந்திய பதிப்புக்கான - தடங்கலற்ற வியாபார முகாமைத்துவ முறைமைகளுக்கான சான்றிதழொன்றினை தத்துவம் பெற்ற சான்றிதழ் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்; அத்துடன்

(ii) முழுமையாக பரீட்சிக்கப்பட்ட அனர்த்த மீட்பு ஏற்பாடுகளின் கிடைப்பனவு, இவ்வொழுங்கு கட்டமைப்பின் 6ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் ஒன்றில் உரிமம்பெற்ற வங்கியுடன் அல்லது வேறுபட்ட மூன்றாம் தரப்பு பணி வழங்குபவர்களுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் அத்தகைய அனர்த்த மீட்பு ஏற்பாடுகள் இம்மாதிரியினைப் பயன்படுத்துகின்ற நேரடித் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

(iii) அத்தகைய கூறுகள்/ பணிகள் ஒன்றில் தனியான அடிப்படையில் அல்லது வேறு அத்தகைய கூறுகள்/ பணிகளுடன் சேர்ந்து கிடைக்கத்தக்கதாக இல்லாமை நாட்டின் நிதியியல் முறைமையினை அல்லது உரிமம்பெற்ற வங்கியின் தொழிற்பாடுகளை பாதிக்காமல் இருக்குமிடத்து, உரிமம்பெற்ற வங்கிகள் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோருக்குச் சொந்தமான பயன்படுத்தப்படுகின்ற உட்கட்டமைப்பினையும் இன்றியமையாதன அல்லாத கூறுகள்/ பணிகளை நீக்கிவிடலாம் என்பதுடன் 9.6.2(ii) இன்படி, அனர்த்த மீட்புத் தேவைப்பாடுகளிலிருந்து மிகமுக்கியமான தகவல்முறைமையொன்றினால் பயன்படுத்தப்படுகின்றவற்றையும் நீக்கிவிடலாம்.

**9.7 மூன்றாம் தரப்பு பணி வழங்குவோருக்குச் சொந்தமானவையும் இலங்கைக்கு வெளியே அமைந்துள்ளவையும்**

9.7.1 உரிமம்பெற்ற வங்கிகள் 9.6இல் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுவதற்கு உட்பட்டு, இம்மாதிரியினைப் பயன்படுத்தலாம்.

9.7.2 மிகமுக்கியமான தகவல் முறைமைகளுக்காக உரிமம்பெற்ற வங்கிகள் நடைமுறைப்படுத்துகின்ற இம்மாதிரி, 9.6.2இல் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்குப் புறம்பாக, பின்வருவனவற்றுடனும் இணங்கியொழுதல் வேண்டும்.

(i) உள்நாட்டில் முறையியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்ற வங்கிகளாக குறித்துரைக்கப்பட்டுள்ள உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளும் 9.6.2(ii) ஆம் பிரிவின் படி அனர்த்த மீட்பு ஏற்பாடுகள் இலங்கையில் அமைந்துள்ளமையினை உறுதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ii) இலங்கையிலிருந்தான பிரதான மற்றும் அனர்த்த மீட்பு அமைவிடங்கள் மற்றும் பிரதான மற்றும் அனர்த்த மீட்பு அமைவிடம் ஆகிய இரண்டிற்குமிடையிலான பல் முழுசுயாதீனமாக தொலைத்தொடர்பூட்டல் இணைப்புக்களின் கிடைப்பனவு, முழுப் பணிச் சுமையினையும் ஆற்றுவதற்கான தனிப்பட்ட இயலாற்றல்.

**9.8 ஏதேனும் தகவல் முறைமைக்காக, மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் முகாமைப்படுத்தப்படும் அல்லது சொந்தமாகவுள்ள தகவல் முறைமை உட்கட்டமைப்பினைப் பயன்படுத்துவதற்கான தேவைப்பாடுகள்**

9.8.1 வங்கியின் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவிலிருந்தான விதந்துரைப்பொன்றின் அடிப்படையில் உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையின் ஒப்புதல்.

9.8.2 இலங்கைக்கு வெளியெ அமைந்துள்ள, மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் முகாமைப்படுத்தப்படும் அல்லது சொந்தமாகக் கொண்ட தகவல் முறைமைக் கட்டமைப்பு உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட அமைவிடத்தில் மாத்திரமே இருத்தல் வேண்டும் என்பதுடன், உரிமம்பெற்ற வங்கியினதும் அதன் வாடிக்கையாளர்களினதும் இலங்கை மத்திய வங்கியினதும், இலங்கை நியாயாதிக்கத்தினதும் நலவுரித்துக்களைப் பாதுகாக்கும் விதத்தில் அத்தகைய அமைவிடங்களில் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலின் போதுமை மற்றும் காத்திரமான தன்மை தொடர்பில் அவர்களே திருப்திப்பட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

**9.9 வாடிக்கையாளர் தரவு அல்லது இரகசியமான வாடிக்கையாளர் அல்லாதவர்களின் தரவுகளை வெளிப்படுத்தும் மிகமுக்கியமான தகவல் முறைமைகளுக்கான மற்றும் தகவல் முறைமைகளுக்கான மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் முகாமைப்படுத்தப்பட்ட அல்லது சொந்தமாக்கப்பட்ட தகவல் முறைமை உட்கட்டமைப்பினைப் பயன்படுத்துவதற்கான தேவைப்பாடுகள்**

9.9.1 மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் முகாமைப்படுத்தப்படும் அல்லது அவர்களுக்குச் சொந்தமாகவுள்ள தகவல் முறைமை உட்கட்டமைப்பு ஐஎஸ்ஓ 27001 - தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகளுக்காக தத்துவம் பெற்ற சான்றளிக்கும் நிறுவனத்திடமிருந்து சான்றிதழொன்றினை உடமையில் கொண்டிருத்தல் வேண்டும்.

9.9.2 பெறப்பட்ட மூன்றாம் தரப்பு பணி நிகழ்வு கிளவுட் கணனிப்படுத்துகையாக இருக்குமிடத்து, கிளவுட் கணனிப்படுத்தல் பணிகளை வழங்குபவர் ஐஎஸ்ஓ 27017 - கிளவுட் பணிகளுக்கான பாதுகாப்புக் கட்டுப்பாடு - பிந்திய பதிப்பிற்கான சான்றிதழொன்றினை தத்துவம்பெற்ற சான்றுபடுத்தும் நிறுவனமொன்றிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.

9.9.3 வாடிக்கையாளர் சம்மதம்

**(i)** வாடிக்கையாளர் தரவுகளை வெளிப்படுத்துகின்ற தகவல் முறைமைகளுக்காக, மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் முகாமைப்படுத்தப்படும் அல்லது அவர்களுக்குச் சொந்தமான தகவல் முறைமை உட்கட்டமைப்பினை உரிமம்பெற்ற வங்கியொன்று பயன்படுத்தும் போது ஒன்றில் புதிய அல்லது ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களுடன் புதிய வியாபார தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு முன்னதாக, வாடிக்கையாளர் தரவுகளை மூன்றாம் தரப்பு பணி வழங்குவோருக்கு வெளிப்படுத்துவது தொடர்பில் வாடிக்கையாளர் சம்மதத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். தகவல் முறைமை உட்கட்டமைப்பு இலங்கைக்கு வெளியே அமைவு பெற்றிருக்குமாயின் வாடிக்கையாளர் தரவுகள் இலங்கைக்கு வெளியே அமைந்திருக்கப் போவது பற்றி அவர்களின் சம்மதத்தினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்

**(ii)** ஏதேனும் தகவல் முறைமைகளுக்கும் வெளிப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் தரவுகள் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் முகாமைப்படுத்தப்படும் அல்லது அவர்களுக்குச் சொந்தமான தகவல் முறைமை உட்கட்டமைப்பினால் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டிருப்பின் உரிமம்பெற்ற வங்கிகள் அத்தகைய தகவல் முறைமைகளில் யாருடைய தரவுகள் சேமிக்கப்பட்டுள்ளனவோ அல்லது செய்முறைப்படுத்தப்பட்டுள்ளனவோ அந்த வாடிக்கையாளர் அனைவருக்கும் அத்தகைய ஏற்பாடுகள் பற்றி அறிவித்தல் வேண்டும். வங்கியொன்றிற்குச் சொந்தமான மற்றும் அதனால் முகாமைப்படுத்தப்படுகின்ற தகவல் முறைமை உட்கட்டமைப்பினால் பயன்படுத்தப்படுகின்ற தகவல் முறைமையொன்றில் சேமிக்கப்பட்டுள்ள அல்லது செய்முறைப்படுத்தப்பட்டுள்ள தரவுகள் யாருக்குச் சொந்தமானதோ அந்த வாடிக்கையாளர்களின் வெளிப்படுத்தலுக்கான சம்மதத்தினை, மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் முகாமைப்படுத்தபடும் அல்லது அவர்களுக்குச் சொந்தமான தகவல் முறைமை உட்கட்டமைப்பிற்கு தரவேற்றம் செய்வதற்கு முன்னர் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**(iii)** 9.9.3(ii)இல் உள்ளவாறு சம்மதத்தினைக் கோரும் பொழுது பதிலிறுப்பதற்கு தவறிய எவரேனும் வாடிக்கையாளருக்கு மாத இடைவெளியில் அல்லது அதற்குக் கூடுதலான இடைவெளியில் வங்கியுடன் பதிவு செய்துகொண்டுள்ள ஏதேனும் தொடர்பூட்டல் முறையில் குறைந்தபட்சம் 3 நினைவூட்டல்களினையாவது வழங்குதல் வேண்டும்.

**(iv)** 9.9.3(iii)இல் உள்ளவாறு 3 நினைவூட்டல்களுக்குப் பின்னரும்கூட பதிலிறுக்கத்தவறிய தற்போதுள்ள அல்லது கடந்த கால வாடிக்கையாளர் தரவுகளை உரிமம்பெற்ற வங்கி, மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் முகாமைப்படுத்தப்படும் அல்லது சொந்தமான தகவல் முறைமை உட்கட்டமைப்பிற்கு தரவேற்றம் செய்யலாம்.

**(v)** வாடிக்கையாளர் சம்மதத்தினைக் கோருகின்ற போது, மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரின் ஈடுபாடுகள் பற்றிய தகவல்களை இணைந்த இடர்நேர்வுகள் மற்றும் நன்மைகளுடன் சேர்த்து அவர்களினால் தெரிவிக்கப்பட்ட முன்னுரிமை மொழியில் தொடர்பூட்டுதல் வேண்டும்.

9.9.4 உரிமம்பெற்ற வங்கிகள், மூன்றாம் தரப்பு பணி வழங்குவோருடனான ஒப்பந்த ரீதியான உடன்படிக்கையினூடாக பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**(i)** உரிமம்பெற்ற வங்கிகளுக்கு பணிகளை வழங்குவது தொடர்பிலான மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரையும் அவர்களுடன் இணைந்த அலுவலர்களையும், இவை உரிமம்பெற்ற வங்கியின் உள்ளகத் தொழிற்பாடுகளாக இருக்குமிடத்து அவற்றைப் பரீட்சிப்பதற்கான மத்திய வங்கியின் உரிமைகள்;

(ii) உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்படும் பணிகள் தொடர்பில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் கோருகின்ற ஏதேனும் தகவல்கள் அல்லது தரவுகளை மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் கிடைக்கச்செய்தல் வேண்டும்;

(iii) ஒன்றில் நேரடியாகவோ அல்லது உரிமம்பெற்ற வங்கியொன்றினூடாகவோ உரிமம்பெற்ற வங்கியொன்றிற்கு வழங்கப்பட்ட பணிகள் தொடர்பிலான ஏதேனும் தகவல்களை அல்லது தரவுகளைக் கோருவதற்கும் பெற்றுக்கொள்வதற்குமான இலங்கை நியாயாதிக்கங்களின் உரிமைகள்;

(iv) உடன்படிக்கையின் முடிவில் அல்லது உரிமம்பெற்ற வங்கியினால் கோரப்படும் போது மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் தரவுகள் மற்றும் முறைமைகளின் சுமுகமான மாற்றல்களுக்கு வசதியளித்தல்;

(v) ஒப்பந்தம் முடிவடையும் பொழுது மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரிடமுள்ள அனைத்து வாடிக்கையாளர் தரவுகளையும் இரகசியமான வாடிக்கையாளர் அல்லாதவர்களின் தரவுகளையும் முன்கூட்டியே இணைக்கப்பட்ட நேரத்திற்குள் நிரந்தரமாக அழித்துவிடல் வேண்டும்; அத்துடன்

(vi) இவ்வொழுங்கு முறைக் கட்டமைப்பிலுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப, சிவப்புக் குழு நடவடிக்கைகள் உட்பட, உள்ளக கணக்காய்வுத் தேவைப்பாடுகள் மற்றும் தகவல் பாதுகாப்பு பரீட்சிப்புத் தேவைப்பாடுகளுக்கு மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் வசதியளித்தல் வேண்டும்.

**10. நடைமுறைப்படுத்தல் மற்றும் இடைக்கால ஏற்பாடுகள்**

10.1 இவ்வொழுங்கு முறைப்படுத்தல் கட்டமைப்பு வழங்கப்பட்ட திகதியிலிருந்து பிரிவு 9இல் உள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான அனைத்து புதிய முயற்சிகளையும் உரிமம்பெற்ற வங்கிகள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

10.2 உரிமம்பெற்ற வங்கிகள் கீழேயுள்ள அட்டவணை 4 இன்படி, இவ்வொழுங்கு முறைப்படுத்தல் கட்டமைப்பிலுள்ள மற்றைய அனைத்து தேவைப்பாடுகளுக்கும் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

10.3 உள்நாட்டில் முறையியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்ற வங்கிகளாகவுள்ள உரிமம்பெற்ற வங்கிகள், விசேடமாக முறையியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்ற வங்கிகளுக்கு ஏற்புடையதான தேவைப்பாடுகளுக்கு உள்நாட்டு ரீதியில் முறையியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்ற வங்கிகளாக குறித்துரைக்கப்பட்ட வங்கிகள் இவ்வறிவித்தல் திகதியிலிருந்து 12 மாதத்திற்குள் அல்லது 10.1 மற்றும் 10.2 இதில் எது பின்னர் வருகின்றதோ அதிலிருந்து இணங்கிக்கொள்வதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

10.4 உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபை இவ்வொழுங்குமுறைக் கட்டமைப்பு விடுக்கப்பட்ட திகதியிலிருந்து காலாண்டு அடிப்படையில் காலக் கட்டமைப்பினை அடைவதற்கு உரிமம்பெற்ற வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்களைக் கண்காணித்தல் வேண்டும் என்பதுடன் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் இணங்கிக்கொள்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் தேவையான வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும்.

அட்டவணை 4: இணங்கிக்கொள்வதற்கான கால அவகாசம்

| இல. | தொடர்பு | தேவைப்பாடு | இணங்கிக் கொள்வதற்கான திகதி |
|---|---|---|---|
| 1. | பொதுவான கால வரையறை<br><br>(நீடிக்கப்பட்ட கால வரையறை இல்லாமல் அனைத்துத் தேவைப்பாடுகளும்) | | 31.12.2022 |
| 2. | நீடிக்கப்பட்ட கால வரையறை | | |
| 2.1 | 4.2.1 | முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் நியமனம் | 01.01.2024 |
| 2.2 | 4.2.1 மற்றும் 4.2.4 | உள்நாட்டில் முறையியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்ற வங்கிகளுக்காக சிறப்பு முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரை நியமித்தல் | 01.01.2026 |
| 2.3 | 4.2.7 மற்றும் 7.2 | முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவருக்கான தகைமைகள் | 31.12.2024 |
| 2.4 | 5.1 | தகவல் பாதுகாப்பு பயிற்சியளித்தல் மற்றும் சான்றழித்தல் | 31.12.2023 |
| 2.5 | 5.2.2 | பயன்படுத்துநர் அணுகுதன்மை மற்றும் முகாமைத்துவ முறைமைகளை அடையாளம் காணல் | 31.12.2024 |
| 2.6 | 5.3 | கணனி பாதுகாப்பு மற்றும் பயன்படுத்துநர் நடவடிக்கை படி முறை முகாமைத்துவம் | 31.12.2024 |
| 2.7 | 5.5.1 | வாடிக்கையாளர் தரவு குறிமுறையாக்கம் | |
| 2.7.1 | 5.5.1 (ii) (அ) | எஞ்சியுள்ள தரவு குறிமுறையாக்கம் | 31.12.2025 |
| 2.7.2 | 5.5.1 (ii) (ஆ) | இடைப்போக்கிலுள்ள தரவு குறிமுறையாக்கம் | 31.12.2024 |
| 2.7.3 | 5.5.1 (ii) (இ) | அகற்றத்தக்க உள்ளடக்கங்களுக்கான முழுவட்டு குறிமுறையாக்கம் | 31.12.2023 |
| 2.7.4 | 5.5.1 (ii) (இ) | முடிவுப் புள்ளி சாதனத்திற்கான முழுவட்டு குறிமுறையாக்கம் | 31.12.2026 |
| 2.8 | 5.5.2 | இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத தரவு குறிமுறையாக்கம் | 31.12.2025 |
| 2.9 | 5.6 | பாதுகாப்பு தொழிற்பாடுகள் நிலையம் | 31.12.2024 |
| 2.10 | 5.8.1 | நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்பு பரீட்சிப்பு | 31.12.2023 |
| 2.11 | 5.8.3 | சுயாதீனமான வெளிவாரி நிபுணர்களின் ஊடுருவல் பரீட்சிப்பு - உற்பத்தியல்லா முறைகள் தொடர்பில் | 31.12.2023 |
| 2.12 | 5.8.3 | உற்பத்தி முறைகள் தொடர்பில் - சுயாதீனமான வெளிவாரி நிபுணர்களின் ஊடுருவல் பரீட்சிப்பு | 31.12.2025 |
| 2.13 | 5.8.4 | சுயாதீனமான வெளிவாரி நிபுணர்களின் சிவப்புக் குழு நடவடிக்கைகள் | 31.12.2026 |
| 2.14 | 6 | கிடைக்கத்தக்க தகவல் முறைமை மற்றும் அனர்த்த மீட்பு | 31.12.2024 |
| 2.15 | 7 | அலுவலர் தகுதித் தேவைப்பாடுகள் | 31.12.2024 |
| 2.16 | 8 | பன்னாட்டு நியமங்களுடன் இணங்கிச்செல்லுதல் | |

| | | | |
|---|---|---|---|
| 2.16.1 | 8.1.1 | ஐஎஸ்ஓ/ஐஈசி 27001, தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைகள் | 31.12.2024 |
| 2.16.2 | 8.1.2 | ஐஎஸ்ஓ/ஐஈசி 27035, தகவல் பாதுகாப்பு நிகழ்வு முகாமைத்துவம் | 31.12.2025 |
| 2.16.3 | 8.1.3 | ஐஎஸ்ஓ/ஐஈசி 22301, தடங்கலற்ற வியாபார முகாமைத்துவ முறைகள் | 31.12.2024 |
| 2.16.4 | 8.1.4 | ஐஎஸ்ஓ/ஐஈசி 20000, பணி முகாமைத்துவம் | 31.12.2025 |
| 2.17 | 9 | தகவல் முறைமை உட்கட்டமைப்பு சொத்துடமை, முகாமைத்தவம் மற்றும் அமைவிடத்தினை அடிப்படையாகக் கொண்ட தேவைப்பாடுகள் - ஏற்கனவேயுள்ள ஏற்பாடுகளுக்கான இணங்குவிப்பு | 31.12.2024 |